Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 4

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது மார்கழி 19 ஆம் நாள் ஷஃபான் பிறை 6 (3-1-63) யாழக்கிழமை இதழ் 324

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்டஸ்தாபனம்




அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணாடி விற்பனையாளரும்
45, மெயின்வீதி, : யாழ்ப்பாணம்.

# சமஷ்டிக் கட்சியின் தொழிலாளர் கழகம்

## பதுளையில் அடுத்த கிளை நிறுவ முயற்சி

## வடக்கு கிழக்கில் கட்சி கிளைகள் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் ஆதரவின்கீழ் இயங்க ஆரம்பித்துள்ள 'இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் கிளையொன்று விரைவில் பதுளையில் திறக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது. இக்கழகத்தின் முதல் கிளை சமீபத்தில் ஹட்டனில் வெற்றிகரமாக நிறுவப்பெற்றது வாசகநேயர்களுக்கு நினைவருக்கும். அடுத்த கிளையை பதுளையில் நிறுவுவதற்கான நடவடிக்கையில் இலங்கைத் தொழிலாளர் கழகநிர்வாகிகள் ஈடுபட்டுள்ளனர். இதற்கிடையில் கழகத்தின் உபதலைவர் பதவிக்கு தொழிற்சங்க இயக்கத்தில் பலவருடகாலம் அனுபவம் வாய்ந்த ஒருவரை நியமிப்பதற்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

மலைநாட்டில் தொழிற்சங்க இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் அதே சமயத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக் கட்சிக் கிளை மேலும் பல இடங்களில் நிறுவவும் புதிய அங்கத்தவர்களைத் திரட்டவும் கட்சியின் மேலிடம் நடவடிக்கை எடுத்து வருகிறது. வாலிப முன்னணிக் கிளைகளையும் விஸ்தரிப்பதில் கட்சி ஈடுபட்டுள்ளது.

காங்கேசன் துறையிலும் நாளை வெள்ளிக்கிழமை வாலிப முன்னணிக் கிளையொன்று ஆரம்பித்து வைக்கப்படவிருக்கிறது. இக்கிளையை தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆரம்பித்துவைப்பார்.

### கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம்

உணவு வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்காத்திலவும் கல்வி மந்திரி அல்ஹாஜ் பதியுதீன் மாமூத்தும் இம் மாதம் 5-ந் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் பொழுது அவர்களுக்கு கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கும் கட்சியினர் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

# இந்திய ஹைகமிஷனர் டில்லி புறப்பட்டார்

## நேரு-ஸ்ரீமதி பண்டாரநாயக்கா பேச்சில் கலந்துகொள்வார்

பீகிங், ஜன. 2

சீனப் பிரதம மந்திரி திரு. சூஎன்-லாய், இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்காவுடன் இன்று தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினர் என நவ சீன செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

சீனக் குடியரசுத் தலைவர் திரு. லியூ சௌ-சீயும், அவரது மனைவியும் அளித்த விருந்தில் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா பேசியபோது இலங்கை மக்களும் சீன மக்களும் கொண்டிருக்கும் உறவு என்றும் பசுமையாக இருக்கும் எனக் கூறினர்.

இந்தோனேஷியப் பிரதமர் டாக்டர் சுபந்திரியோ இன்று பீகிங் வந்து சேர்ந்தார். சீன வெளிநாட்டுமந்திரி திரு. சென்-யீயுடன் அவர் பேச்சு நடத்தினர்.

சீனப் பிரதமர் சூஎன்-லாயும், இந்தியப் பிரதமர் நேருவும் கடந்த சில தினங்களாக எல்லைப் பிரச்சினை பற்றிக் கடிதப் போக்குவரத்து நடத்திவருகிறார்கள்.

புதுடில்லியில் இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா, பிரதமர் நேருவுடன் நடத்தும் சம்பாஷணையின்போது பங்குபற்றிக்கொள்ளும் பொருட்டு, கொழும்பிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. பி. கே. கபூர் நேற்றிரவு புதுடில்லி புறப்பட்டார்.

# தைப்பொங்கலுக்கு சர்க்கரை விநியோகம்

## யாழ்ப்பாணத்தில் 'பர்மிட்' வசதி; கலப்படத்துக்கு கடும்தண்டனை

யாழ்ப்பாணம், திங்கள்

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் சர்க்கரை விநியோகிப்பதற்கு உணவுக்கட்டுப்பாட்டு பகுதி விசேஷ நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. சர்க்கரையைக் கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமாக விற்பனை செய்பவர், சர்க்கரையில் கலப்படம் செய்பவர்கள் ஆகியோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது; இத்தகைய குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் ஆகக்கூடிய தண்டனை விதிக்கப்படுமென அறிவிக்கப்படுகிறது.

இம் மாதம் 7-ம் திகதி தொடக்கம் வீடொன்றுக்கு அரை றாத்தல் சர்க்கரை வீதம் கூட்டுறவுப் பண்டகசாலை, உத்தரவு பெற்ற வியாபாரிகள் மூலம் விநியோகிப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

உள்ளூர் வைத்தியர்களின் மருந்துத் தேவைகளுக்கும், கோயில் தேவைகளுக்கும் 'பர்மிட்' மூலம் சர்க்கரை வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் இதில் சில மோசடிகள் இடம் பெற்று வருவதாகத் தெரிகிறது. பொய் வியாபா

(8-ம் பக்கம் பார்க்க)

# 70,000 தொன் அரிசி இறக்குமதியாகும்

## உணவு மந்திரி அறிவிப்பு

கொழும்பு, புதன்

சீன, பர்மா, ஐக்கிய அரபுக்குடியரசு ஆகிய நாடுகளிலிருந்து சுமார் 70,000 தொன் மேலதிக அரிசி இறக்குமதி செய்ய ஏற்பாடாகியுள்ளதாக உணவு வர்த்தக கப்பல் போக்குவரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின இன்று தெரிவித்துள்ளார்.

சென்ற வருடம் நவம்பர் மாதம் 7-ம் திகதிக்கும் டிசம்பர் 19-ம் திகதிக்குமிடையில் இந்த நாடுகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படியே இது சாத்தியமாகியுள்ளது என்று மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

திரு. இலங்கரத்ன மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த வருடம் போதியளவு அரிசி இருப்பில் இருக்கும். இதனால் பங்கீட்டரிசிப் புத்தகம் வைத்திருக்கும் ஒருவர் தமக்குரிய முழு அரிசியையும் பெறுவார். அரிசி விநியோகம் சம்பந்தமாக தவறான பிரசாரங்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிகிறது. ஆனால் எந்தவித தட்டுப்பாடு பற்றியும் பயப்படத்தேவையில்லை.

# "சேவையே தெய்வீக வாழ்க்கைக்கு முதற்படியாகும்"

## திவ்யஜீவன சங்கக் கூட்டத்தில் திரு. கிரிதாரி பிரசாத்

யாழ்ப்பாணம், வியாழன்

"சேவையே தெய்வீக வாழ்க்கைக்கு முதற்படியாகும். இன்றைய உலகில் உண்மையையும் தூய்மையையும் காண்பது அரிது. அதேபோல உண்மை விஷயத்தில் ஈடுபாடு கொள்ளும் எண்ணம் அருகிவருவதும், போலி விஷயங்களில் அக்கறை காட்டுவதும் கவலைக்குரியதாகும்". இவ்வாறு கோயம்புத்தூர் கௌரவ நீதிபதி திரு. நா. கிரிதாரி பிரசாத் யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்க ஆதரவில் கந்தர்மடம் கந்தபுராண மடத்தில் நேற்று மாலை உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் தமது தலைமை உரையில், ஒரு வட இந்தியர் இவ்வளவு மேலாகத் தமிழைக் கற்றுப் பேசுகையில் தமிழராகிய நாம் சிங்களம் கற்று பௌத்தத்தையும் அறிந்து கொள்ளுவதில் எவ்வித தீமையுமில்லை என்று குறிப்பிட்டார்.

திரு. பிரசாத் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

"சொல்லுதல் யார்க்கும் எளிது. ஆனால் சொன்னபடி நடப்பது அரிது. எமது சொல்லுக்கும், வாழ்க்கைக்கும் நிரம்பிய வேறுபாடு உண்டு. இந்த நிலைமை மாறுவிடின் தெய்வீக உலகில் எவருமே சஞ்சரிக்க முடியாது. மனித வாழ்க்கை தூய்மையுடன் கெட்ட எண்ணங்களிலிருந்து விடுபட்டு வாழ்வதே இந்த வாழ்க்கையாகும். தெய்வீக வாழ்க்கை வாழ வேண்டுமானல் தூய்மைவே

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**St. John's College**
**Chundikuli, Jaffna.**

G. C. E. Ordinary, and Advanced Level
H. S. C. and University Entrance Examinations.

Classes will commence on January, *16, 1963* Application on froms available from the office must reach the Director on or before January *11, 1963.*

J. C. Handy
*Director.*

**சங்கமித்தா கலைக்கூடம்**

பீ. ஏ. உயர்தரத் தேர்வுகட்கு (G. C. E. (Ad. L.), H. S. C) சிறந்த முறையில் சம்ஸ்கிருதம், பாளி, தமிழ் கற்பிக்கப்படும். வகுப்புக்கள் ஆரம்பம்: 5-1-63.

க. ம. செல்வரத்தினம்,
பீ. ஏ, (2-ம் வகுப்பு),
சாவித்திரி மாளிகை,
"சங்கமித்தா கல்விக்கூடம்",
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.

கிளை: 19, 2-ம் குறுக்குவீதி,
யாழ்ப்பாணம்.

628

**தேவை**

அச்சகத்தில் நன்கு அச்சுக் கோர்க்கவும், செற்பண்ணி மெசினில் அச்சடிக்கவும் (Composing & Machine Men) தெரிந்த திறமையுள்ள வேலையாள் உடனே தேவை.

விண்ணப்பிக்கவும்:- மனேஜர்,
நாஷனல் அச்சகம்,
இராசா கட்டிடம்,
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

627

**தேவை**

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு அருகாமையில் இருக்கும் சன்லைட் டையேஸ் அன் கிளீனஸ் ஸ்தாபனத்துக்கு 4 மணி நேரம் டிலிவறி கிளாக் வேலை செய்ய 2 ஆள் தேவை. விபரங்களுக்கு நேரில் விண்ணப்பிக்கவும். 623

**தொய்வு: நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர் ... எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய ... லோக் இனா. தொய்வுக்கு 10நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தர்,
கைலாயபிள்ளையார்ச்சாவிலடி,
யாழ்ப்பாணம்.


# 1961-62 நிதிவருடத்தில் வரியில் 630 லட்சம் துண்டு

கொழும்பு, புதன்

*1961—62-ம் நிதி வருடத்தில் 3980 லட்சம் ரூபா வரிகள் மூலம் வரவாகும் என மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் சென்ற 1961-62-ம் நிதிவருடத்தில் 3350 லட்சம் ரூபாவே வரிகள் மூலம் வசூலிக்கப்பட்டுள்ளது. இதனால் அந்த நிதி வருடத்தில் 630 லட்சம் ரூபா துண்டுவிழுந்துள்ளது.*

1961–62-ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் விற்பனை வரி வசூலிப்பதென சொல்லப்பட்டிருந்த போதிலும் பின்னர் அது வாபஸ் செய்யப்பட்டது. விற்பனை வரி வாபஸ் செய்யப்பட்டதனாலேயே மேற்கண்ட 630 லட்சம் ரூபாவும் துண்டு விழுந்துள்ளது. விற்பனை வரி மூலம் 450 லட்சம் ரூபா எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

வருமான வரி மூலம் ரூ. 232,115,209-16 வசூலிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 70 லட்சம் ரூபா வசூலாகும் என மதிப்பிடப்பட்டிருந்தது. தேசிய அபிவிருத்தி வரி மூலம் ரூ. 18,736,169-91 வசூலிக்கப்பட்டிருந்தாலும் மதிப்பிடப்பட்டிருந்த தொகை 250 லட்சம் ரூபாவாகும். முத்திரை, காணி வரி முதலியன 1961-62 நிதி வருடத்தில் அதிகரித்திருக்கிறது. முத்திரை வரி மூலம் ரூ.120 லட்சம் வசூலாகும் என எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அதனால் 170லட்சம் ரூபா வசூலாகியிருக்கின்றது, இது போலவே தோட்டவரி, காணிவரி ஆகியவையும் மதிப்பிடப்பட்ட தொகையிலும் பார்க்கக் கூட வசூலாகியுள்ளன.

## மீனவர் சச்சரவில் சமரசமில்லை

பாணந்துறை, புதன்

இப்பகுதியைச் சேர்ந்த குறிப்பிட்ட ஒரு கடலில் மீன்பிடிப்பதற்குத் தங்களுக்குத்தான் உரிமையுண்டு என இரு மீனவர் சங்கங்களைச் சேர்ந்தவர்களுக்கிடையில் நடைபெறும் சச்சரவு இன்னும் முடியவில்லை. இதற்கென இரு சங்கங்களைச் சேர்ந்தவர்களைக் கொண்ட ஒரு சமரசக் கூட்டம் கூட்டப்பட்டது. இதில் மீன்பிடி இலாகா உதவி டைரக்டரும் பிரசன்னமாயிருந்தார். பொலிஸார் செய்துகொண்ட முயற்சிகளும் சமரசம் நிலவ எதுவித பலனுமளிக்கவில்லை. மாஜிஸ்டிரேட் கோர்டில் வழக்குத் தாக்கல் செய்யப்படவிருப்பதாக இரு சாராருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜே. பி.க்கு மன்னாரில் பாராட்டு

மன்னார், புதன்

'யாழ்ப்பாணப் பகுதிக்குச் சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்ட ஒருவருக்கு மன்னார் மாவட்ட மக்கள் சார்பாக வரவேற்பளிக்கப்படுவது இதுவே முதன் முறையாகும். திரு. கு. வி. தம்பித்துரையின் சிறப்பியல்புகளே இதற்குக் காரணம் எனக் கருதுகின்றேன்' என்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. என். பி. ஜெகநாதன் மன்னார் விளாங்குழி அரசினர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற பாராட்டு விழா வொன்றுசகுத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். திரு கு. வி. தம்பித்துரை சமாதான நீதிபதியாக நியமனம் பெற்றமையையொட்டி அன்னாருக்கு இப்பாராட்டுபசாரமளிக்கப்பட்டது.

முகாந்திரம் அப்துல் காசிம் மரைக்கார் ஜே. பி., ஜனாப் எச். எம். சரீப் உட்பட மற்றும் பலரும் பேசினர். திரு. தம்பித்துரை தமக்களிக்கப்பட்ட இப்பாராட்டுபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

## 'ஒற்றுமைதான் நோக்கம்'

—எம். பி.

கம்பஹா, புதன்

கம்பஹாப் பகுதியில் உள்ள கத்தோலிக்க பாடசாலைகள் உட்பட சகல சிங்களப் பாடசாலைகளுக்கும், அவர்கள் மதத்தால் வேறுபட்டாலும் இனத்தால் ஒன்றுபட்டிருக்கவேண்டுமென்பதற்காகவே தேசியப் பெயர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன, என்று பௌத்த நூல்நிலையம் ஒன்றிற்கு அத்திவாரக்கல் நாட்டிப் பேசுகையில் கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

# எப். ஆர். சேனநாயகா ஞாபகார்த்த தினம்

## "சுதந்திரம் கிடைத்தது அவரால் தான்"

கொழும்பு, புதன்

'இந்த நாட்டு மக்கள் பட்டினியில் வாடும் பொழுது வெளிநாட்டுப் பிரச்னைகளைத் தீர்க்க சீனு சென்றுவிட்டார் பிரதமர் சிறிமா'.

இவ்வாறு எப். ஆர். சேனநாயகா ஞாபகார்த்த தினக் கூட்டத்தில் பேசிய திரு. ஏ. ஈ. குணசிங்கா குறிப்பிட்டார்.

அலெக்சாந்திரா பிளேஸில் நடைபெற்ற இந்த ஞாபகார்த்தக் கூட்டத்தில் திரு. குணசிங்கா மேலும் பேசுகையில் திரு. சேனநாயகா அரசியலில் ஈடுபட்டிருக்காது விட்டால் இந்த நாட்டில் இன்று அரசியலே இருந்திருக்கமாட்டாது என்றார்.

கூட்டத்துக்குத்தலைமை தாங்கிய கண்டி மேயர் சேர் பெனட் சொய்சா பேசியதாவது:-

திரு.சேனநாயகா அரசியலில் ஈடுபட்டுஉழைக்காதிருந்தால் இலங்கை சுதந்திரமடைந்திருக்கமுடியாது. மக்களுக்குச் சேவைசெய்தவர் திரு. சேனநாயகா.

வண ஹரோல்ட் டி' சொய்ஸா பேசுகையில் வகுப்பு, இன, மதபேத பாகுபாடின்றி எல்லோரையும் சமமாகப்பாவித்து எல்லோருக்கும் உதவி செய்தவர் திரு. சேனநாயகா என்றார்.

## "கூட்டுறவு கலையாக மாறவேண்டும்"

### அரசாங்க அதிபர் உரை

திருக்கோணமலை, புதன்

"கூட்டுறவு ஒரு பொதுச் சொத்து என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. இது ஒவ்வொருவருக்கும் சொந்தம் என்பதை உணர்ந்து ... திமத வேறுபாடின்றி ... ள்ளவேண்டும். கூட்டுறவு என்ற எண்ணம் பொதுமக்களிடையே ஓர் கலையாக மாற வேண்டும். அப்போது தான் இவ்வியக்கத்தில் ... மதிப்பு உணரப்படும்" கொட்டியாரப்பற்று மே... ட... குச் சேவையை சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைத்து பேசிய திருக்கோணமலை அரசாங்க அதிபர் திரு. டி. எம். ஏ. ஸ்பெட்ல்வின் ... வாறு கூறினார். மூதூர் எம். பி.க்களான ஜனாப் ... ஏ. மஜீத், ஜனாப் ... ஈ. எச். முகமதலி, திருக்கோணமலை கூட்டுறவு உ... யாளர் திரு. மதி..., திரு. செல்வரட்னம் ஆகியோர் சொற்பொழி... னர். கொட்டியாரப்பற்று ... றவுச் சங்கத் தலைவர் ... கே. செல்வரட்னம் தலைமை தாங்கினார்.


**பொலிடெக்னிக்**
**(யாழ்ப்பாணக் கிளை)**
**341, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

இந்த ஸ்தாபனம் ஜனவரி 4-ந் திகதி வெள்ளிக்கிழமை மீண்டும் ஆரம்பமாகின்றது.

பின்வரும் பாடங்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் ஜி. ஸி. ஈ. உட்பட எல்லா வர்த்தகப் பரீட்சைகளுக்கும் கற்பிக்கப்படும்.

(1) தட்டெழுத்து, (2) சுருக்கெழுத்து, (3) கணக்குப்பதிவியல், (4) வர்த்தகம, (5)வர்த்தகக்கணக்கு, (6) சிங்களம், (சகல பரீட்சைகளுக்கும்( ... 629

**'ஈழநாடு' டயரிகள்**

கொழும்பில் துரிதமாக விற்பனையாகின்றன. கொழும்பில் 'ஈழநாடு' டயரிகள் தேவைப்படுவோர் 'ஈழநாடு' கொழும்புக் கிளை மனேஜருடன் தொடர்பு கொள்ளவும்.

விபரங்களுக்கு: 'ஈழநாடு' மனேஜர்,
சரஸ்வதி ஹோல்,
கொழும்பு.

CWE

**கூ. மொ. வி. ஸ்தாபனம்**

மொத்த, சில்லறை விற்பனை நிலையம்

பருத்தித்துறை, யாழ்ப்பாணம்

ஆகிய இடங்களில் 1963 ஜனவரி 5-ந் திகதி முறையே காலை 10 மணிக்கும் மாலை 4-30 மணிக்கும்

வர்த்தக, உணவு, கப்பல் போக்குவரத்து மந்திரி
**கௌரவ. ரி. பி. இலங்கரத்ன அவர்கள்**
திறந்து வைப்பார்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# லடாக்கில் சுசூலுக்கருகில் சீனர் குண்டு வீச்சு

## இந்திய நிலைகளுக்கு சேதம் எதுவும் இல்லை

## இந்திய-நேபாள உறவுபற்றி புதிய நேபாளதூதர் கருத்து

ஸ்ரீநகர், ஜனவரி 2

லடாக்கில் உள்ள சுசூல் விமானத் தளத்தின் கரையோரத்தின்மீது சீனத் துருப்புக்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை குண்டுவீச்சு நடத்தியதாக இங்கு கிடைத்த செய்திகள் கூறுகின்றன. குண்டுவீச்சு ஐந்து நிமிஷங்கள் வரைதான் நீடித்தன. இந்திய நிலைகள் எதற்கும் சேதமேற்படவில்லை. சுசூல் விமானத் தளத்தின்மீது சீனத் துருப்புக்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாக தங்களுக்குத் தகவல் எதுவும் கிடைக்கவில்லையென்று புதுடில்லியில் இந்திய அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்தார்.

### போர் நிறுத்தத்தின் பின் சம்பவம்

1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ந் திகதி சீனர்கள் ஒருதலைப்பட்சமாக யுத்தத்தை நிறுத்திய பின் இந்திய — சீன எல்லையில் சீனர் குண்டுவீச்சு நடத்தியதாகச் செய்தி கிடைத்திருப்பது இதுதான் முதல் தடவை. எல்லையில் சண்டை நிறுத்தப்பட்டபோதிலும் லடாக் பகுதியில் சில மைல் நீளத்துக்கு இந்திய எல்லைக் காவல் துருப்புக்களும் சீன எல்லைக் காவல் துருப்புக்களும் எதிர் எதிரே காவல் புரிந்துவருகின்றனர்.

### நவீன ராணுவம் மட்டும் போதாது

புதுடில்லி நகரசபை அளித்த ஒரு வரவேற்புபசாரத்துக்கு நன்றிதெரிவித்து இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் பேசுகையில் நவீன ராணுவம் மட்டுமல்ல ராணுவ சாதனங்களின் உற்பத்தி, பராமரிப்பு ஆகியவை மிக முக்கியம் என்ருர். நாட்டின் பாதுகாப்புக்கு ஆயுதங்கள் முக்கியமானவையென்ருலும் மக்கள் உறுதிகொண்டிருந்தால்தான் அவைகளினுல் பயனுண்டு என்று கூறினுர். சீன ஆக்கிரமிப்பு மக்களை ஒன்றுசேர்த்துவிட்டது என்றும் திரு. சாவன் கூறினுர்.

### விளைபொருள் உற்பத்தித் திட்டம்

விளைபொருள் உற்பத்தியைத் துரிதப்படுத்துவதற்காக திட்டத்தி[l] சேர்க்கப்படாத திட்டங்கள் சில உருவாக்கப்பெற்றிருப்பதாக உணவு மந்திரி திரு. எஸ். கே. பட்டீல் நேற்று ஹைதராபாத்தில் ஒரு வைபவத்தில் பேசுகையில் கூறினுர் உணவுப் பொருள் பற்ருக்குறையில்லையெனவும் சத்தான உணவு உற்பத்தியில் சிரத்தையெடுக்கப்படவேண்டுமென்றும் திரு. பட்டீல் கூறினுர். உணவுப் பொருள்களை வீணுக்கக் கூடாதென்ருலும் சிக்கனபடுத்தவேண்டிய அவசியமில்லையெனவும் மந்திரி பட்டீல் சொன்னுர்.

### நான்கு பத்திரிகைகளுக்கு எச்சரிக்கை

பம்பாயிலிருந்து வெளிவரும் இரண்டு பத்திரிகைகளும் புதுடில்லியிலிருந்து வெளியாகும் ஒரு பத்திரிகையும் லக்ஷ்மணபுரியிலிருந்து வெளியாகும் ஒரு பத்திரிகையும் நாட்டின் பாதுகாப்பு விதிகளுக்கு முரணுனவகையில் செய்திகள் வெளியிட்டிருப்பதாக பத்திரிகை ஆலோசனைக் குழு சிபார்சு செய்துள்ளது. இதைத் தொடர்ந்து இப்பத்திரிகையின் ஆசிரியர்களுக்கும் பிரசுரிப்பாளர், வெளியீட்டாளர்களுக்கும் அரசாங்கம் எச்சரிக்கை செய்துள்ளது. இனி அதிக கவனத்துடன் நடந்துகொள்ளும்படி அரசாங்கம் தெரிவித்துள்ளது.

### தேசிய பாதுகாப்பு நிதி

தேசிய பாதுகாப்பு நிதிக்கு மேலும் மேலும் பணமும், தங்கமும், தங்க நகைகளும் வந்து சேர்ந்துகொண்டிருக்கின்றன. உத்தர பிரதேசத்தில் இதுவரை மூன்று கோடி ரூபாய் சேர்ந்துள்ளது. மைசூரில் ஒரு கோடி அறுபது லட்சம் ரூபாயும், கேரளத்தில் 86 லட்சம் ரூபாயும் சேர்ந்துள்ளன. பம்பாயில் ஆலைத் தொழிலாளர் தங்கள் ஒரு நாள் வருமானத்தை அளித்ததில் பதினெரு லட்சம் ரூபாய் சேர்ந்துள்ளது.

### புதிய பரிசுப் பத்திரங்கள்

புதிய பரிசுப் பத்திரங்கள் நேற்று முதல் விற்பனைக்கு வந்துள்ளன இதர பரிசுப் பத்திரங்களைப்போல இப்பத்திரங்கள் 5 ரூபாய், 100 ரூபாய்களுக்கானவை. இரண்டு சத விகிதம் ஐந்து வருடங்களுக்கு வட்டி வழங்கப்படும். முதலுக்கும் வட்டிக்கும் வருமானவரி கிடையாது. இப்பத்திரங்களின் முதல் விற்பனையின்போது நிதி மந்திரி மொரார்ஜி தேசாய் இரண்டாயிரம் ரூபாய்க்கு பத்திரங்கள் வாங்கினுர். வாழ்க்கையின் சகல துறைகளிலுமுள்ள மக்கள் பரிசுப் பத்திரங்களை வாங்கி முதலீடு செய்து நாட்டின் பாதுகாப்பு முயற்சிக்கு உதவி செய்யவேண்டுமென்று திரு. மொரார்ஜி கேட்டுக்கொண்டார். இப்பரிசுப் பத்திர விற்பனை நேற்று சென்னையில் நடந்தபோது தமிழ்நாடு நிதி மந்திரி திரு. எம். பக்தவத்சலம் 100 ரூபாய்க்குப் பத்திரங்கள் வாங்கினுர்.

### நேபாள தூதர் பதவியேற்பு

இந்தியாவில் புதிதாக நியமிக்கப்பட்ட நேபாளத் தூதர் திரு. கனல் நேற்று ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனிடம் தமது பதவிப் பத்திரங்களைச் சமர்ப்பித்தார். இந்திய–நேபாள உறவைச் சீராக்கி வளர்ப்பதே தமது முக்கிய பணியாக இருக்குமெனவும் இப்பொழுது இரு நாடுகளின் உறவும் அபிவிருத்தியடைந்திருப்பதால் தமது பணி சுலபமாகவிருக்குமென்று நம்புவதாகவும் திரு. கனல் கூறினுர். நேபாள பொருளாதார முன்னேற்றத்துக்கு இந்தியா அளித்துவரும் உதவிக்கு திரு. கனல் நன்றிதெரிவித்துக்கொண்டார்.

## "நடமாட்டசுதந்திரம் தந்தால் திரும்புவேன்"

## ஷோம்பேயின் நிபந்தனை

### காங்கோ பார்லிமெண்ட் கூட்டத்தொடர் ஒத்திவைப்பு

எலிஸபெத்வில்லி, ஜன 2

தனது நடமாட்ட சுதந்திரத்துக்கு உத்தரவாதமளிக்கப்பட்டால் தாம் எலிஸபெத்வில்லிக்கு வருவதற்குச் சம்மதிப்பதாக கடாங்கா அதிபர் திரு. மொயிஸ் ஷோம்பே தெரிவித்துள்ளார். திரு. ஷோம்பே இப்பொழுது ஜடோட்வில்லியிலிருக்கிருர்.

திரு. ஷோம்பே எலிஸபெத்வில்லிக்குத் திரும்புவதற்கு அவருக்கு பாதுகாப்பும் நடமாட்ட சுதந்திரமும் அளிக்கப்படுமென்பதற்கு இத்தரவாதமளிக்கப்பட வேண்டுமென்று பிரிட்டிஷ் வெளிவிவகாரமந்திரி ஹியூம்பிரபு தெரிவித்திருந்தார்.

இந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டால் தாம் எலிஸபெத்வில்லிக்குத் திரும்பிச் செல்ல ஒப்புக் கொள்வதாக திரு. ஷோம்பே தெரிவித்திருக்கிருர்.

கடாங்கா வருமானத்தை இதர பகுதிகளுடன் பகிர்ந்துகொள்வது சம்பந்தமாகக் கடாங்கா தேசிய வங்கியின் அதிபர் லியப்போல்ட்விட்லிக்குச் சென்று காங்கோ அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்றும் திரு. ஷோம்பே கூறினுர்.

எலிஸபெத்வில்லியைச் சுற்றி 20 மைல் பரப்பளவு இடம் இப்பொழுது ஐ. நா.வின் கட்டுப்பாட்டிலுள்ளது. திரு. ஷோம்பே தங்கியுள்ள ஜடோட்வில்லி எலிஸபெத்வில்லியிலிருந்து 85 மைல் தூரத்திலிருக்கிறது. கடாங்கா விமானப்படை ஐ. நா-விடம் சரணடைந்து விமானங்களை ஒப்படைகக வேண்டுமென்று ஐ. நா. அதிகாரிகள் நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தனர். இதற்கு கடாங்கா விமானப்படை இணங்காவிட்டால் அது அழிக்கப்படுமென்றும் ஐ. நா. அதிகாரிகள் எச்சரித்திருந்தனர். இதைத் தொடர்ந்து ஐ. நா. படையினர் நேற்று உஷார் நிலையிலிருக்க உத்தரவிடப்பட்டிருந்தனர்.

காங்கோ பார்லிமெண்ட் கூட்டத் தொடர் மார்ச்மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக காங்கோ பிரதமர் திரு அடௌலா அறிவித்துள்ளார்.

கடாங்கா அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பளிப்பது சம்பந்தமாக காங்கோ அதிபர் கஸவுபு விரைவில் பிரகடனம் ஒன்றை வெளியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது

## 'எங்களைத் தாக்கினுல் அழித்து ஒழித்து விடுவோம்'

### ஏகாதிபத்தியவாதிகளுக்கு குருஷ்சேவ் எச்சரிக்கை

மாஸ்கோ, ஜன. 2

"நாங்கள் சமாதானத்தையே விரும்புகிருேம். சமாதானத்துக்காகவே நாங்கள் போராடுகிருேம். ஆனுல் முதலாளித்துவவாதிகள் எங்கள் மீது தாக்குதல் நடத்தினுல் ஒரு சிலமணி நேரத்துக்குள் அவர்களை அழித்து நாசமாக்கி விடுவோம்" என்று சோவியத் பிரதமர் திரு. நிகிட்டா குருஷ்சேவ் நேற்று கிரம்ளினில் நடைபெற்ற புத்தாண்டு விருந்து வைபவமொன்றில் பேசுகையில் எச்சரிக்கைவிடுத்தார்.

"இது புத்தாண்டு மிரட்டல் அல்ல. இது ஒரு எச்சரிக்கை. உண்மையான எச்சரிக்கை" என்று திரு. குருஷ்சேவ் வலியுறுத்திக் கூறினுர்.

தயார் செய்யாமல் சோவியத் பிரதமர் பேசினுர். அடிக்கடி அவர் கையை ஆட்டி ஆட்டிப் பேசினுர்.

நவசீனுவுக்கும் சோவியத் யூனியனுக்குமுள்ள கொள்கை வேறுபாடுபற்றி திரு. குருஷ்சேவ் குறிப்பிடுகையில், "சோஷலிஸ்ட் முகாமுக்குள் உள்ள வேற்றுமைபற்றி ஏகாதிபத்தியவாதிகள் பேசுகிருர்கள். எங்களுக்குள் கருத்து வேற்றுமைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனுல் அவை ஒரு குடும்பத் தகராறு" என்ருர்.

"எங்கள் தாராறில் ஏகாதிபத்தியவாதிகள் தலையை நீட்டினுல் நாங்கள் ஒன்றுசேர்ந்து எதிர்ப்போம்" என்று திரு. குருஷ்சேவ் கூறினுர்.

## பாக்.—சீனு வர்த்தக ஒப்பந்தம்

கராச்சி, ஜன. 2

நவசீனுவும் பாகிஸ்தானும் சென்ற சனிக்கிழமை வர்த்தக ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டன. இந்த ஒப்பந்தத்தின் படி சீனுவுககு பருத்தி நூல்களையும் பருத்தி ஜவுளிகளையும் பாகிஸ்தான் ஏற்றுமதி செய்யும்.

## கிரேக்க மன்னர் இந்தியா வருகிருர்

புதுடில்லி, ஜன. 2

கிரேக்கமன்னரும் அரசியும் அடுத்த மாதம் இந்தியாவுக்கு உத்தியோக ரீதியில் விஜயம் செய்யவிருக்கின்றனர்.

## புருனேய் புரட்சி பற்றி துங்கு

பினங்கு, ஜன. 2

"சமீபத்தில் புருனேயில் தோல்வியில் முடிவடைந்த புரட்சி, புருனேயில் சுல்தான் ஆட்சியை வீழ்த்துவதற்காக மட்டுமல்ல மலாயா அரசாங்கத்தையும் கவிழ்க்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதாகும்" என்று மலாயாப்பிரதமர் துங்கு அப்துல்ரஹ்மான் நேற்று இங்கு ஒருகூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மலேசியா அமைக்கும் மலாயாவின் திட்டத்தைக் கண்டு இந்தோனேஷியா பெருமை கொண்டுள்ளதென்றும் மலாயாப்பிரதமர் கூறினுர்.

## ஆழ்வாப்பிள்ளை ஓய்வுபெறுகிருர்

கொழும்பு, புதன்

உணவு, வர்த்தக, கப்பல், போக்குவரத்து அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கே. ஆழ்வாப்பிள்ளை இந்த வருடம் மார்ச்மாதத்தில் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெறுகிருர்.

திரு. ஆழ்வாப்பிள்ளை சுமார் பத்துவருடகாலமாக நிரந்தரக் காரியதரிசியாகக் கடமையாற்றிவந்துள்ளார். இந்தக் கால எல்லையுள் பெரும்பகுதியான காலத்தில் உணவு, வர்த்தக, கப்பல், போக்குவரத்து அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாகக் கடமையாற்றி வந்துள்ளார்.

1929-ம் வருடம் சிவில்சேவையில் சேர்ந்த திரு. ஆழ்வாப்பிள்ளை சென்ற வருடத்தில் ஓய்வுபெற இருந்தார். ஆனுல் அவரது சேவைக்கால எல்லை அரசாங்கத்தினுல் மேலும் ஒரு வருடத்துக்கு அதிகப்படுத்தப்பட்டது.

### மணி வாக்கு

என் கை உனக்கல்லாது
எப்பணியும் செய்யற்க.

— திருவாசகம்.


# ஈழநாடு

EELANADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு மார்சழி மீ 19உ (3-1-63)


## இலங்கையும் ஜனநாயகமும்

புதிதாக விடுதலையடைந்த ஆசியநாடுகள் பலவற்றிலும் ஜனநாயகம் தோல்வி அடைந்து, சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டுவிட்டதாயும், இந்தியாவும் மலாயாவும் இதற்கு விலக்காக இருப்பினும் அங்கும் இராணுவ ஆட்சி அல்லது அராஜரிகம் சீக்கிரத்தில் ஏற்பட்டுவிடக்கூடுமென்றும், இலங்கையிலே பிரபல பத்திரிகாசிரியராக இருந்த டார்ஸி வித்தாச்சி எழுதியுள்ள 'பிரவுன் சாகிப்' என்ற புதிய புத்தகத்தில் எழுதுகின்றார். இந்தியா விஷயம் எப்படியாயினும், இலங்கையிலே சுதந்தரமடைந்தபின் சென்ற சுமார் 14 ஆண்டுகளாக ஜனநாயகத்தின் பெயரால் நடந்துவரும் பல கூடாத காரியங்களையும், இங்கு அரசியல் நிலைமை மோசமாகி வருவதையும் கண்டு அவர் இவ்விதம் எச்சரிக்கை செய்வதை அலட்சியம் செய்யமுடியாது.

ஆசிய நாடுகளுக்கு ஜனநாயகமென்பது புதிதுதான். இதனால் பலபல தவறுகள் செய்யப்படுவது இயற்கை. என்றாலும் வருடங்கள் 14 ஆகியும் தவறுகள் திருத்தப்படுதற்குப் பதில், அதிக தவறுகள் செய்யப்படுகின்றன. சிறப்பாகச் சிறுபான்மைச் சமூகங்களின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிறது. ஜனநாயக மென்பது பெரும்பான்மை சமூகத்தின் ஆட்சி என்ற முறையிலே நடப்பதுடன் தங்களது பல உரிமைகளும் பலபல விதங்களிலும் பாதிக்கப்படுவதை உணர்ந்த சிறுபான்மைச் சமூக மக்கள், எப்படி, எப்போது தங்களுக்கு விமோசனம் ஏற்படுமோ என்று திகைக்கக் கூடிய நிலையில் உள்ளனர்.

இதேசமயம் சிறுபான்மை மக்களிடையேயும், துரதிருஷ்டவசமாக பலபோட்டிக் கட்சிகள் தோன்றி அவர்களது ஒற்றுமையையும் பலத்தையும் குறைப்பதாக இருக்கின்றன. ஜனநாயகத்திலே பல அரசியல் கட்சிகளுக்கு இடமிருப்பது இயற்கை. என்றாலும் வகுப்புவாதமுறையிலும், பதவி வேட்டைக்காகவும் போட்டிக் கட்சிகள் தோன்றுவது, குழந்தைப்பருவத்திலுள்ள ஜனநாயகத்தையே கொன்றுவிடக் கூடும். அதுவும், பல உரிமைகளையும் இழந்து தவிக்கும் சிறுபான்மை சமூகங்களுக்கிடையே போட்டிக்கட்சிகள் தோன்றுவது, அவர்களுக்குப் பெருந்தீங்காக முடியும். குறிப்பிட்ட சில வருடங்களுக்காவது கட்சிப்பாட்டிகள் இல்லாமல், எல்லாரும் தேசிய, பொதுநன்மைக்கான முறையில் ஒத்துழைக்க முடிந்தால் தான், ஜனநாயகப் பயிர் நன்கு வளர்வதுடன், நாடும் அபிவிருத்தியடைய முடியும்.

அரசியல் கட்சி முறைக்குப் பதில் ஏற்கனவே இலங்கையிலிருந்த கமிட்டி முறையைத் திருத்தியமைக்லாமென்றும், இந்தியாபோன்ற பெரிய நாடுகளுக்கு ஜெயப்பிரகாஷ் நாராயண் கூறும் கிராமராஜ்ய முறையை ஏற்படுத்தலாமென்றும் திரு. வித்தாச்சி தமது புத்தகத்தில் யோசனை கூறியுள்ளார். நாட்டில் ஒற்றுமை குலைந்து ஜனநாயகத்துக்கே பெரிய ஆபத்து ஏற்படக்கூடிய சமயத்தில், இதுபற்றிப்பலரும் ஆலோசனை செய்யவேண்டிய அவசியம் அதிகரித்துள்ளது. எப்படியும், இராணுவ, சர்வாதிகார ஆட்சியை விட, ஜனநாயகமே மக்களுக்குப் பல சுதந்தரங்களையும் வழங்குவதால், அதைப் பாதுகாத்து வளர்க்க வேண்டியதவசியமாகும். ஜனநாயகத்தில் பல குறைகளிருக்கலாம். அவற்றைத் திருத்தவும் மக்களின் நன்மைக்கானமுறையில் அதை நடத்தவும் இலங்கைத் தலைவர்கள் கட்சி சுயநலப் போட்டிகளை விட்டு முன்வரின், அது இலங்கைக்குமட்டுமன்றி, உலகத்துக்கே செய்யக்கூடிய மேலான நன்மையாகும்.

# இந்தியாவுக்கு 'கள்ளத்தோணிகள்'

## ஏழுவருடத்தடை—திருக்கேதீச்சரம், காரைநகர் திருவாசக விழாக்கள்—எழுத்தாளர் ராஜாஜி-நிஜாம் ஏழையானது எப்படி?

— ஐயாறன் எழுதுவது —

மார்கழி மாதம் திருவாதிரைநாள் நெருங்கி வருகிறது. வருகிற 9-ந் திகதி புதன்கிழமை உதயகாலத்தில் நடேசர் தரிசனம். முன்னரெல்லாம் ஈழத்திலிருந்து பல்லாயிரக்கணக்கானவர்கள் தரிசனத்துக்காக வருடம் இருமுறை சிதம்பரம் செல்லுவர். தோணிகளில் சென்று தோணிகளிலேயே திரும்பிவிடுவராம். ஆனால் விஞ்ஞானம் வளர்ந்த நமக்கு அரசியல் சுதந்திரமும் வந்தபின், பிரயாண சுதந்திரமெல்லாம் பறிபோயிற்று.

"சிதம்பரம் போகாமல் இருப்பேனோ இந்த ஜன்மத்தை வீணாகக் கழிப்பேனோ" என்று தவித்த நந்தனருக்கும் வேதியரின் அனுமதி கிடைத்துவிட்டது. ஆனால் நமக்கோ ஜன்மத்துக்கும் ஒரேயொரு முறைதான் யாத்திரை செல்லலாமாம். அதுவும் செலாவணி வேதியர் அனுமதித்தால்தான் உண்டு. இதையெல்லாம்பற்றி நினைக்கும்போது வேதனையாகத்தான் இருக்கிறது. இம்முறை டிசம்பர் சீஸனுக்கும் ஒருசிலரே இங்கிருந்து தப்பிச் செல்ல முடிந்துள்ளதாக நமது சென்னை நிருபர் தெரிவிக்கிறார்.

இந்தியாவிலிருந்து 'கள்ளத்தோணி'கள் வருவதாகக் கூறுகிறார்களல்லவா? இப்போது இலங்கையிலிருந்து வெளியேற தோணிகளுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுவருவதாயும் ஆளுக்கு ரூ. 200 கட்டணம் கொடுத்தால் பத்திரமாக அக்கரை சேர்த்துவிடுவதாயும் கேள்விப்பட்டேன். இந்த அரசாங்கம் நீடூழி வாழவேண்டுமென்றும் இந்தத் தடைகளெல்லாம் செழித்தோங்க வேண்டுமென்றும் கள்ளத்தோணிக்காரர்கள் விசேஷ பிரார்த்தனை செய்து பிள்ளையாருக்கு சதுர்தேங்காய் உடைப்பதாகக் கேள்வி!

* * *

எது நடந்தாலும் நன்மைக்கேயாதலால் இந்தத்தடைகளும்கூட ஒருவிதத்தில் நன்மைக்குத்தான் இருக்க வேண்டும். காரைநகர், திருக்கேதீச்சரம் முதலிய பலபல இடங்களிலும் இம்முறை திருவெம்பாவைவிழா விசேஷமாக நடக்கிறது. இந்தியாவிலிருந்து பாஸ்கரதொண்டமான், கி. வா. ஜ. இவர்கள் வருகின்றார்கள். இவ்வளவு தடைகளுக்கும் தப்பி, இவ்விருவரும் இங்கு வர முடிவது பெரிய காரியம்.

இங்கு சின்னக் கோவில்களிலும்கூட திருவெம்பாவை உற்சவம் நடக்கிறது. ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதியை, அதிகமாக சின்னக் குழந்தைகள் பாடுகிறார்கள். யாழ்ப்பாணம், மானிப்பாய் முதலிய இடங்களிலே அதிகாலை தெருபஜனைகள் நடக்கின்றன. இந்தியா செல்ல முடியாதவர்கள் ஈழத்துச் சிதம்பரமான காரைநகருக்கும் திருக்கேதீச்சரத்துக்கும் செல்லவிருக்கிறார்கள். பாடல் பெற்ற ஸ்தலமான திருக்கேதீச்சரம் மீண்டும் புத்துயிர் பெற்று வளர்ந்து வருகின்றது. கேதீச்சரநாதன் அவசர அழைப்பு அனுப்பியிருக்கிறார். இன்று புறப்படலாமென்று இருக்கிறேன். அங்கு நடைபெறும் திருவாசக மகாநாட்டைப்பற்றியும் உங்களுக்கு அவ்வப்போது தெரிவிக்கிறேன். தபால் தவக்கத்தால், இந்தப்பந்தி வருவதில் ஏதும் தடைபட்டால், வித்தியாசமாக நினைக்காமல் நீங்கள் மன்னிக்க வெண்டுமென்றே, இதைக் குறிப்பிடுகிறேன்.

* *

ஏழுவருட ரயில் பிரயாணத் தடை வருமுன்பாக இலங்கையிலிருந்து தினம் சராசரி 50 அல்லது 60 பேர்களே இந்தியா நோக்கிச் சென்றார்களாம். தடை விதித்தபின்பு இரண்டொருவர் கூட செல்ல முடியாதென்று நினைத்தோமல்லவா? ஆனால் சராசரி 270 முதல் 300 பேர்வரை செல்லுகிறார்களாம்! இவர்களெல்லாம் முதல் முறையாகவோ, 7 வருடத்துக்குப் பிறகோ செல்லுகிறார்கள் போலும்! கட்டுப்பாடும் தடையும் இந்தியாவுக்குச் செல்ல வேண்டுமென்ற ஆவலை இங்கு பலருக்கும் அதிகம் தூண்டிவிட்டுள்ளதுபோலும்.

செலாவணியைப் பாதுகாக்க இத்தடை போடப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனால் நேர்மாறாக அதிகம்பேர் செல்லுவதால், கூறும் காரணமெல்லாம் வெறும் 'புருடா' என்று எழுதுகிறார் ஓர் அன்பர். வாஸ்தவம். இங்குள்ள நாடற்றவர்களும், பதிவுப்பிரஜைகளும் இந்தியர்களைப் பதிவு செய்து கொள்ள ஒரு "தூண்டுதலாகவே" இப்புதிய தடை உத்தரவு போடப்பட்டுள்ளதாயும், செலாவணி காரணம் வெறும் கண்துடைப்பு என்றும் கேள்விப்பட்டேன். இன்னும் எவ்வளவுகாலம் இந்தச் சங்கடங்கள்.

* * *

### ராஜாஜி எழுத்தாளர்

சென்னையில் நடந்த தமிழ் எழுத்தாளர் மகாநாட்டில் பிரபல எழுத்தாளராகிய ராஜாஜி கேசுகையில், எழுத்தாளரின நிலைமை இப்போது மாறிவிட்டதென்றும், அவர்களுக்குப் பணக்கஷ்டங்களில்லை என்றும், ஆகவே அவர்கள் யாருடன் போராட 'தொழில்யூனியன்' அமைக்கின்றனரென்பது தெரியவில்லை என்றும் கிண்டலாகக் கூறினார். சுமார் 25 வருடங்களுக்கு முன் இருந்த நிலையுடன் ஒப்பிடுகையில்

(5ம்பக்கம் பார்க்க)

# அறிவுநூல்களை எழுத வேண்டும்

## எழுத்தாளர்களுக்கு ராஜாஜி அறிவுரை

சொற்செட்டும், கருத்துச்செறிவுமே பெரும்எழுத்தாளர்களை ஏனையோரிடமிருந்து பிரித்துக் காட்டும் சிறப்பியல்பு என்று ராஜாஜி எழுத்தாளர் மகாநாட்டை ஆரம்பித்துவைக்கையில் கூறினார். எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக வார்த்தைகளை உபயோகிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அழுத்தமாக கருத்துக்களை வெளியிட முடியுமென்பதை இன்றைய எழுத்தாளர்கள் உணரவேண்டும் என்றும் அவர் கூறினார்.

மெமோரியல் ஹாலில், தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற 10-வது எழுத்தாளர் மகாநாட்டை ராஜாஜி ஆரம்பித்து வைத்தார்.

ஒரு நூலை எடுத்துக்கொண்டால் அது சொல்ல வந்த விஷயத்தை அழகான ஒரு உருவத்துடன் ஒப்பிடலாம்; கையாளப்படும் வார்த்தைகளை அந்த உருவத்துக்கு அணிவிக்கும் உறுப்புடன் ஒப்பிடலாம் என்று ராஜாஜி கூறினார். அளவுக்கு மீறி அதிகமாக உடுப்பு அமைந்துவிட்டால், உருவத்தின் அழகு வெளிப்படுவதற்குப் பதிலாக உருவத்தையே மறைத்து விடவும் கூடும் என்றார்.

இந்த உவமானம் ஒரு அளவு வரை தான் பொருந்தும் என்றும், எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக உடுக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அழகு வெளிப்படுகிறது என்று இந்தக் காலத்தில் சிலர் சொல்லும் அளவுக்கு இந்த உவமானத்தை நீட்டக் கூடாதென்றும் ராஜாஜி கூறினார்.

எழுத்தாளர்களின் நூல்கள் பொதுஜனத்தின் அறிவு வளர்ச்சிக்காக இருக்க வேண்டும். நூலகங்களை நிரப்புவதற்காக இருக்கக் கூடாது என்றும் ராஜாஜி கேட்டுக்கொண்டார்.

குழந்தைகளுக்கென்று அலாதியான நடையில் எழுதுவதையும் அவர் ஆதரிக்கவில்லை.

ராஜாஜி தொடர்ந்து பேசியதாவது:-

"எழுத்தாளர்" என்ற வார்த்தையின் அர்த்தத்தை ஆராய்கையில், இந்தச் சொல் சமீபகாலத்தில் உருவாக்கப்பட்டதே. வார்த்தைகள் மீது கட்டுப்பாடு செலுத்துபவர்கள் எழுத்தாளர்கள் என்ற கருத்தை ஏற்படுத்தக்கூடியது. ஆனால் எழுத்தாளர்களோ கட்டுப்பாடு ஏதுமின்றி வார்த்தைகள் தங்குதடையின்றி பயன்படுத்தப்பட

(5-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியருக்குக் கடிதம்

## வட இலங்கைத் தமிழாசிரியரின் நலவுரிமை

பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டமையால் இன்று பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டாலும் ஆசிரியர்களுக்கு மாற்றம் ஒரு தலைவலியாய்விட்டது.

இன்று மக்கள் சொந்தான பாடசாலைகளுக்குப் பாத்தியதை கொண்டாடுபவர்கள் தனிப்பட்ட முறையில் எவரும் இருக்கமுடியாது. எனவே தான் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுகிறார்கள். இவ்வாறு செய்யப்படும் இடமாற்றம் நிர்வாகத்துறைக்கும் கல்விக் கொள்கைக்கும் ஒப்புவதாயினும் ஆசிரியர்களுக்குச் சிக்கல்களை ஆக்கியும், ஒழுங்கீனத்தைக் கொடுத்துக்கொண்டும் இருக்கிறது. தமிழாசிரியர்களைப் பொறுத்தமட்டில் வட இலங்கை ஆசிரியர்களின் நலவுரிமைகள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன. இவர்கள் பல்வேறு தரமான முகாமையின் கீழ் கடமையாற்றினர்கள். இன்றோ ஒருமுகப்பட்ட அமைப்பின்கீழ் சேவை செய்கின்றனர். இந்நிலையில் ஏற்கனவே குடாநாட்டிலேயே ஒரு பகுதி துன்பத்தையும் பெரும் பகுதி இன்பத்தையும் அனுபவித்தனர். வட இலங்கைப் பாடசாலைகளிற் கடமை புரியும் சிலர், குடாநாட்டுக்குள்ளேயே இம்சிக்கப்பட்டு தீவாந்தர சிட்சை பெறுகின்றனர். தான் பிறந்த கிராமத்துப் பாடசாலைகளிற் பிறர் கடமை புரிய அக்கிராமத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர்கள் குடாநாட்டின் வேறுபகுதிகளிற் சேவை புரிகின்றனர்.

உடுத்துறை. வெற்றிலைக்கேணி, நெடுந்தீவு முதலிய பகுதிகளிலும், முல்லைத்தீவு, வவுனியா, மன்னர் போன்ற இடங்களிலும் வட இலங்கை ஆசிரியர்களின் ஒரு பகுதியினர் இன்னல்களை அனுபவிக்கையில் அவர்களுடைய சொந்த இடங்களிற் பிறர் வசதிகளை அனுபவிப்பதால் வட இலங்கை ஆசிரியர்களின் ஒரு பகுதியினரிடையே நலவுரிமைகள் பாதிக்கப்படுவது வெளிப்படையாதலின், வட இலங்கையிலேயே பாதிக்கப்படும் ஆசிரியர்களுக்கு முதல் விமோசனம் தேடிக்கொடுப்பது கல்விப்பகுதியினதும், எமது அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தினதும் தலையாயகடமையாகும்.

வட இலங்கையைத் தாயகமாகக் கொண்டவர்கள் தான் மற்றைய மாகாணங்களிலும் அநேகமாகப் பதவி வகிப்பவர்கள். கிழக்குமாகாணத்தைப் பொறுத்தவரை அரசினர் ஆசிரியர்கள் அதிகம் எனினும் வெளியிடங்களிற் சேவைசெய்பவர்கள் மிகமிகக் குறைவு. வெளியில் இருந்தாலும் கூடிய சீக்கிரம் கிழக்கிலங்கையிற் சேவை செய்யும் வாய்ப்பைப பெறலாம். நம் ஆசிரியர்களோ ஏனைய மாகாணங்களிற்சேவை செய்யவேண்டியவர்கள். அப்பாடசாலைகளோ வசதியான இடங்களிலமைந்துள்ளன. அதிலும் புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு, முதலிய இடங்களில் தேவையான ஆசிரியர்கள் உள்நாட்டிலேயே இருக்கிறார்கள். எனவே ஏனைய இடங்களிலேதான் நம் ஆசிரியர்கள் சேவைசெய்ய வேண்டியுள்ளது. இந்நிலையில் வடஇலங்கையிலிருந்து மாற வேண்டியவர்கள் யாவர் என்பதைத் தீர்மானித்து அவர்களுடைய நலவுரிமைகளைப் பாதிக்காதமுறையில் மாற்றங்களமைவது நன்று.

இந்நிலையில் ஒரு காலக்கெடுவுக்குள் மாற்றபபட்டால் நலவுரிமைகள் பாதிக்கப்படமாட்டா. இத்துடன் வட இலங்கையைத்தாயகமாகக்கொண்ட சகோதர ஆசிரியர்கள் தென்னிலங்கையில் இருக்கிறார்கள். இவர்களும் அ. இ. தமிழாசிரிய சங்கத்தின் அங்கமாகவேயுள்ளனர். அவர்களுடைய உள்ளங்கள் வெதுவெதுப்

(5ம் பக்கம் பார்க்க)

# அராலி அம்மன் கோயில் முன் கைகலப்பு

## ஒருவர் மரணம்; இருவர் கைது

யாழ்ப்பாணம், வியாழன்

அராலி வள்ளியம்மன் ஆலய முன்றலில் நடைபெற்ற ஒரு கைகலப்பு காரணமாக நல்லையா பேரம்பலம் என்பவர் மரணமானார். இம்மரணம் சம்பந்தமாக அராலியைச் சேர்ந்த இருவர் சந்தேகத்தின் பேரில் பொலிசாரல் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். இறந்தவரின் தாயாரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சுயநிலையற்ற நிலையிலேயே இன்னமும் இருப்பதாகத் தெரிகிறது.

அராலியைச் சேர்ந்த நல்லையாபேரம்பலம் என்பவரின் மரணம் குறித்து திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். சி. கதிரவேலு விசாரணை நடத்தினர்.

பேரம்பலம் பாலேஸ்வரன் என்பவர் தமது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:-

இறந்தவருடன் நான் அராலி வள்ளியம்மன் ஆலயத்திற்குச் சென்றேன். அங்கு சென்ற போது பூசை நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆலயத்திற்கு உள்ளும் புறமும் மக்கள் நிரம்பியிருந்தனர். நாங்கள் வழிபாடு செய்து கொண்டு நின்றோம்.

ஒருவாரத்திற்கு முன் பாலசிங்கநாயகம் என்பவரும் அன்னலிங்கம் என்பவரும் எங்களைக் கோயிலுக்குச் செல்ல வேண்டாமென எச்சரித்தனர்.

நாங்கள் சம்பவம் நடைபெற்ற அன்று வள்ளியம்மன் ஆலயத்தில் வழிபாடு செய்து கொண்டு நிற்கும்போது பாலசிங்கநாயகமும் அன்னலிங்கமும் அங்கு பொல்லுடனும் பனம் கொட்டனுடனும் வந்தனர்.

### தலையில் அடித்தார்

பாலசிங்கநாயகம் இறந்தவரின் தலையில் நான்கு அல்லது ஐந்து தடவை பொல்லால் அடித்தார். அன்னலிங்கமும் அடித்தார். நெற்றியிலிருந்து இரத்தம் பெரியளவில் வந்து கொண்டிருந்தது. பேரம்பலம் நிலத்தில் வீழ்ந்தார். நான் சத்தமிட்டேன். இறந்தவரின் தாயார் ஓடிவந்தார். அவரும் சத்தமிட்டார் நல்லபிள்ளையையும் அவர்கள் தாக்கினார்கள். அவரும் வீழ்ந்தார். முருகுப்பிள்ளை என்பவரும் வெளியில் வந்து நல்லபிள்ளையைத் தாக்கினர். பின்னர் பாலசிங்கநாயகமும் அன்னலிங்கமும் என்னை ஏசி தாக்கவும் வந்தனர். நான் உடனே அங்கிருந்து ஓடிவிட்டேன்.

டாக்டர் பெஞ்சமின் பிரேத பரிசோதனை நடத்தினர்.

இம்மரணம் சம்பந்தமாக அராலியைச் சேர்ந்த அப்பாக்குட்டி பாலசிங்கநாயகம, அப்பாக்குட்டி அன்னலிங்கம் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர். இருவரையும் இம்மாதம் 8-ம் திகதிவரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

---

# இலங்கையை தர்ம தீபமாக்க முயற்சி

மஹாரகம, புதன்

இலங்கையை மீண்டும் 'தர்மதீப' மாக்குவதற்கு மஹாரகம சாசனசேவக சமித்தி திட்டமிட்டுள்ளது.

இதுசம்பந்தமான முழுவேலைகளையும் 'தர்மதீபசன்விதானையா' என்னும் விஷேச இயக்கம் கவனிக்கும். இயக்கம் தனது ஆரம்ப வேலைகளை அநுராதபுரத்தில் நடத்தும் இங்கு ஒரு குறிப்பிட்ட கிராமம் இந்த வேலைகளுக்கென ஒதுக்கப்பட்டு அங்கு இயக்கத்தின் நோக்கங்கள் பரப்பப்படும்.

இயக்கத்தின் வேலைகள் கிராமங்களிலேயே முதலில் இடம்பெறும். மக்களிடையே சமயபக்தியை வளர்ப்பதுவே இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம்.

இந்த இயக்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் அரசாங்க இலாகாக்களின் உதவியையும் பெற சமித்தி தீர்மானித்துள்ளது.

---

## இந்தியாவுக்கு கள்ளத்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் எழுத்தாளர் நிலை இப்போது சற்றே மேம்பட்டிருக்கலாம். ஆனாலும் எழுத்தாளருக்குப் பணச்சங்கடங்கள் இன்னும் அதிகமுண்டு. பல அரிய புத்தகங்களை எழுதிவைத்திருந்தும், பிரசுரிக்கப் பணமில்லாமலும் பிரசுரித்த புத்தகங்களுககுப் பணம் கிடைக்காமல், கஷ்டப்பட்டும தவிப்பவர் அதிகம். யூனியன் மூலமும், வேறுவழியாகவும் அவர்களுக்கு உதவிகள கிடைக்கவும் அவர்களது நலஉரிமைகள் பாதுகாக்கப்படவும் வேண்டும். ரஷ்யாவிலே எழுத்தாளர்கள்தான் பணக்காரர்களாம்! ஆனல் இங்கோ அவர்களில் பலர் அரைப்பட்டினிக்காரர்களே! முன்னர் 'முழுப் பட்டினி'க்காரர்களாக இருந்த அவர்கள். இப்போது அரைப்பட்டினிக்கு 'உயர்ந்துள்ளது' வரவேற்கத்தக்கதே.

* * *

### "ஏழை" நிஜாம்

ஹைதராபாத் நிஜாம் மன்னர், தாம் "மிக ஏழை" என்றும் அதனல் பாதுகாப்பு நிதிக்கு, தாம் பென்ஷன் தொகையில் எதுவும் கொடுக்க முடியாதிருப்பதாகவும் எழுதியதாக ஒருசெய்தி பத்திரிகைகளில் வெளியாயிற்றல்லவா?

இதைப் பார்த்ததும், கேரளத்திலே ஓர் அன்பர் மிகவும் அனுதாபப்பட்டு, நிஜாம்மன்னருக்கு ஐந்துரூபாய் மணியார்டர் அனுப்பி, அவருக்குக் கஷ்டநிவாரண நிதி சேர்க்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தாராம.

இதையெல்லாம் பார்த்ததும், நிஜாமின் காரியதரிசி, பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், நிஜாம் மன்னருக்கு 40 கோடி ரூபாய், இந்திய அரசாங்கப் பத்திரங்களில் போட்டிருப்பதாயும், வருடம் அவருக்கு 82 லட்ச ரூபாய் வருமானம் கிடைத்தாலும், 2 கோடி ரூபாய் அதிகச் செலவாகியுள்ளதாயும் விளக்கியுள்ளார்! பாருங்கள் பெரிய கோடீச்வரருக்குப் பணக்கஷ்டமாம்! அட கடவுளே!

கம்யூனிஸம் வருவதாயின்? நிஜாமுக்கு இந்தப் "பணக்கஷ்டங்கள்" எல்லாம் அடியோடு தீர்ந்து நிம்மதியாக இருக்கக் கூடும் போலும்.

---

## ஆசிரியருக்குக் கடிதம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

படையாமலும், நம்மை விட்டுப் பிரிந்து செல்லாமலும், பரந்த மனப்பான்மையுடன் பார்த்தாலவர்களும் (தென்னிலங்கை வாசிகளல்ல) வட இலங்கை ஆசிரியர்களே. அவர்களும் சொந்த இடத்திற் சேவைசெய்யும் உரிமை உடையவர்களே. ஆதலின் அவர்கட்கும் சமசந்தர்ப்பம் வழங்கத் தவறின் வடஇலங்கை ஆசிரியர்களின் நலவுரிமைகள் பறிபோனதாகவே கணிக்கப்படலாம். ஆசிரியர்களின் இடமாற்றம் இனித் தவிர்க்கமுடியாதது. அது நமக்கிடையே பிளவை உண்டுபண்ண மேலிடம் வழிவகுக்குமாயின் அதற்கு இடம் கொடாமல் கொள்கைக்காக விட்டுக்கொடுத்து வாழ்வதும், வாழவிடுவதும் சீரிய நெறியாகும்.

மு. வே. வல்லிபுரநாதன்,
அல்வாய்.

---

## அறிவு நூல்களை...

(4-ம்பக்கத் தெடர்ச்சி)

வேண்டுமெனக் கருதுகின்றனர். சொல்வளம் குறைவாயிருப்பதால் இப்போது பல தமிழ் சொற்களின் தலையில் முன் இருந்ததை விட அதிகமான அர்த்தங்கள் ஏற்றப்பட்டு வருகின்றன. உதாரணமாக "மொழி" என்ற சொல்லை எடுத்துக் கொண்டால், கடந்த காலத்தில் அதற்குச் "சொல்" என்று மட்டுமே அர்த்தம். இப்போதோ அது பாஷையையும் குறிக்கிறது.

பல எழுத்தாளர்களிடையே மற்றொரு குறைபாடும் காணப்படுகிறது. அவர்கள் சர்ச்சைகளைக் கிளப்பி விடுகிறார்கள். பிறர் எழுதும் நூல்களைப் பற்றி உதவுபடியற்ற வகையில் விமர்சிக்கிறார்கள். அவர்கள் எழுதாமல் விட்டு விட்டவைகள் பற்றியோ, அல்லது எழுதியவைகள் பற்றியோ குற்றம் கூறுகிறார்கள்.

தமிழ் வளர்ச்சியுற்று வருகிறது. தமிழ் எழுத்தாளருககு நல்ல எதிர்காலம் உண்டு என்பது எனது நம்பிக்கை.

பேராசிரியர் அன்பு கணபதி மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார். தமிழில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகிறது என்றும் அந்நிய சொற்களும் புதிய சொற்களும் புழக்கத்துக்கு வந்திருக்கின்றன என்றும் அவர் தலைமையுரையில் குறிப்பிட்டார். இந்தப் போக்கைத் தடுத்து நிறுத்த முடியாது என்ற போதிலும், தமிழின் தூய்மையைப் பேணிப் பாதுகாத்து வரவேண்டியது அவசியமாகும் என்றார்.

வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ.கே. ஜி. ராதாமணளன் பேசுகையில், ஆட்சித்துறையிலும், போதனு மொழித்துறையிலும் ஆங்கிலத்துக்குப் பதிலாக தமிழை கொண்டுவரும் திட்டங்கள் சம்பந்தமாக, சர்க்கார் அவ்வப்போது எழுத்தாளர்களின் ஆலோசனையை நாடி வரவேண்டும் என்றார்.

ஆரம்ப விழாவுக்குப் பின்னர், "தமிழில் புதிய முயற்சிகள்" என்பதுபற்றி ஒரு கருத்தரங்கு நடைபெற்றது.

### 10 ஆண்டுத் திட்டம்

'தினமணி' துணையாசிரியர் திரு. எ. ஜி. வெங்கடாச்சாரி பேசியதாவது:-

பத்திரிகைகள் தமிழ் இலக்கிய வளர்ச்சியிலே இன்று பெரும் பங்கு கொள்கின்றன. மொழி வளர்ச்சிக்கு உயாந்த தரமுடைய எழுத்துக்களே அவசியமாகும். விஞ்ஞான தொழில் நுட்பப் சாஸ்திரங்களைப் பொறுத்தமட்டில் தமிழில் புதிய சாஸ்திரங்களை உருவாக்குவதற்குச் சிறிது அவகாசம் தேவை. இதற்கான பத்தாண்டு திட்டம் ஒன்று அமைப்பது சிறந்ததென்றே தோன்றுகிறது. ஆங்கில மொழி மூலம் பயின்றவர்களுக்கும் இடையே உள்ள புதிய சாஸ்திர அறிவு வித்தியாசத்தை இத்திட்டத்தின் மூலம்தான் நிவிர்த்தி செய்ய முடியும்.

தமிழ்த் தினசரிகளையும், சஞ்சிகைகளையும் வாசிப்போரின் தொகை இன்று அதிகரித்து வருவது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். இலக்கிய ரசனையில்லாத வாசகர்களை கவருவதற்கு சில பத்திரிகைகள் தகாத வழிகளைக் கையாளுவது மிகுந்த வருத்தத்துக்குரியது. மாவட்டங்களில் அரசாங்க அச்சுக்கூடங்களை நிறுவுவது நல்லதெனவும் நான கருதுகிறேன்.

---

## எகிப்து, கானு பிரதிநிதிகள்

### இலங்கை பிரதமருடன் நேருவை சந்திப்பர்

கெய்ரோ, ஜன. 1

சீன-இந்திய எல்லைப்பிரச்னை பற்றி இலங்கைப் பிரதமர் நேருவைச் சந்திக்கும்போது ஐக்கிய அராபிய குடியரசுப் பிரதமர் திரு. அலிசாப்ரி, கானு நிதிமந்திரி ஆகியோரும் அவருடன் நேருவைச் சந்திப்பார்கள்.

---

# 'சுதந்திரக்கட்சியுடன் இனிக்கூட்டு இல்லை'

## இடதுசாரிக்கட்சிகள் நிலைபற்றி டாக்டர் கொல்வின் விளக்கம்

இரத்தினபுரி, புதன்

'பிற்போக்கு நோக்கம் கொண்டவர்களும் ஏகாதிபத்திய வாதிகளுமான யு. என். பி. யைச் சேர்ந்தவர்களை மீண்டும் ஆட்சிபீடத்தில அமர்த்தும் அபாயகரமானதொரு நிலைக்கு நாடு சென்று கொண்டிருக்கிறது' என இங்கு நடைபெற்ற தோட்டத் தொழிலாளர் யூனியனின் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா குறிப்பிட்டார்.

டாக்டர் கொல்வின் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஸ்தலஸ்தாபன தேர்தல்களில் கிடைத்த முடிவு இதற்கான முன்னேடியான அறிவிப்பு எனவே இந்த நாட்டிலுள்ள சகல தொழிற் சங்கங்களும் ஒன்று சேர்ந்து யு. என். பி. ஆட்சி பீடத்திலமராது பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம.

இந்நிலை ஏற்பட்டதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தின் திறமைக் குறைவும் பொருளாதார சீர்குலைவுமே காரணம். ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் மக்களுக்கு துரோகம் இழைத்து விட்டது.

சுதந்திரக்கட்சிக்கு இடதுசாரிக் கட்சிகள் கொடுத்த ஆதரவு வீணக்கப்பட்டுவிட்டது. இந்த மாதிரி கூட்டு ஒப்பந்தங்கள் இனிமேல் என்றுமே ஏற்படாது.

கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில் அரசாங்க இலாகாக்களெல்லாம் நிர்வாக சீர்குலைவு காரணமாக மோசமான நிலையிலுள்ளன என்றும் இந்த நிலையில் தொழிலாளர்களும் பொதுமக்களும் அரசாங்கத்தை முழுதாக எதிர்க்க எண்ணத் தொடங்கி விட்டார்களென்றும் கூறினர்.

---

## பிரியாவிடை வைபவம்

மன்னர், புதன்

"இந்த மூன்றுவருடகாலமும் என்னுடன் ஒத்துழைத்து, சேவை செய்த உங்களை என்னல் மறக்க முடியாது. இனி இங்கு எனக்குப்பதிலாக வரும் புதிய பொறுப்பாளர் அவர்களையும் என்னைப்போல் ஆதரித்து சேவை செய்யுங்கள். நான் அரசாங்க சேவையில் இருந்தாலும் நானும் உங்களைப் போல் ஒரு பாட்டாளியே" இவ்வாறு தனக்களிக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்தில் கலந்து கொண்ட முருங்கன் உத்தரவாத விலைத் திட்ட பண்டகசாலையின் பொறுப்பாளர், திரு. கே. பாக்கியராசா முருங்கன் கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர்களுக்கு கூறினர். இவருடன் மன்னர் மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் திரு. மு. சின்னத்தம்பி அவர்களுக்கும், கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர்களான திரு. சண்முகராசா, திரு. அப்புலிங்கம் முதலியவர்களுக்கும், முருங்கன் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களால் கடந்த சனிக்கிழமை மாலை 6 மணியளவில் ஊர்வலமாக அழைத்துச் சென்று சங்க மண்டபத்தில் பிரியாவிடை வைபவம் நடத்தப்பட்டது.

---

## சப்இன்ஸ்பெக்டர் காரியப்பர்

### மாஜிஸ்டிரேட் வாரண்ட் பிறப்பித்தார்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டராக விருந்து இப்பொழுது மன்னரில் கடமையாற்றும் எம். ஜே. காரியப்பருக்கு எதிராக யாழ்ப்பாணம் கூட்டு மாஜிஸ்டிரேட் வாரண்ட் பிறப்பித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் எம். டி. ஜீ. பீட்டரினல் தொடரப்பட்ட வழக்கொன்றில் எதிரியான சப் இன்ஸ்பெக்டர் காரியப்பர் அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அங்கு பிரசன்னமாகியிருக்கவில்லை இதனலே வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த அக்டோபர் மாதம் 27-ம் திகதி மணிக்கூண்டு வீதியில் எதிரி ஈ. என். 9555 இலக்கமுள்ள வாகனத்தின் சாரதியாக விருந்து போக்குவரத்தைத் தடைசெய்ததாகவும் மற்றும் சிலகுற்றச்சாட்டுகளுடனும் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டிருந்தது.

முடிக்குரிய தரப்பில் வழக்கறிஞர் திரு. வி. நடராசா இன்ஸ்பெக்டர் மார்சோவின் உதவியுடன் ஆஜரானர்.

---

## சீன ஆக்கிரமிப்பை எதிர்க்க

### எழுத்தாளர் முடிவு

சென்னை, ஜன. 2

கம்யூனிஸ்டு சீன ஆக்கிரமிப்பை முறியடிக்க சாத்தியமான எல்லா சேவைகளையும் புரிய தமிழ் எழுத்தாளர்கள் தயாராயிருப்பதாகஇங்குதமிழ் எழுத்தாளர்கள் 10-வது மகாநாடு நிறைவேற்றிய ஒரு தீர்மானம் அரசினருக்கு உறுதி அளிக்கிறது. சீனவின் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பையும் தீர்மானம் கண்டிக்கிறது.

டில்லி, உஸ்மானியா, வாரணசி, அலகாபாத்,கேரள சர்வகலாசாலைகளுக்குத் தொழில் ஆராய்ச்சிவகுப்புகளை நடத்துவதற்காக சென்னை, அரசினர் மான்யஉதவி அளித்துவருவதற்கு மகாநாடு நன்றி தெரிவித்துக் கொள்கிறது. இதேபோன்று மான்ய உதவியை திருப்பதி ஸ்ரீ வெங்கடேசுவரா சர்வகலாசாலைக்கு வழங்குமாறு மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

### கல்லூரிகளில் தமிழ் போதனு மொழி

எல்லாக் கல்லூரிகளிலும் தமிழை போதனு மொழியாக கொள்வதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறும் மகாநாடு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

தம் நிகழ்ச்சிகளில் அதிக தமிழ் எழுத்தாளர்களுக்கு வாய்ப்பு அளித்து அவர்களுக்கு நல்ல சன்மானம் அளிக்குமாறும் அகில இந்திய ரேடியோவை கேட்டுக்கொள்கிறது.

# திருக்கோணேசர் ஆலய கும்பாபிஷேக தினம்

## சுபநாளல்லஎனகாஞ்சிகாமகோடி சங்கராச்சாரியார் கருத்து

திருக்கோணமலை, செவ்வாய்

சரித்திரப்பிரசித்திபெற்ற திருக்கோணமலை கோணநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகத்தை 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மூன்றும் திகதி மிகவும் சிறப்பாக நடத்துவதென கும்பாபிஷேகக் குழு தீர்மானித்திருந்தது. இக் கும்பாபிஷேகம் சம்பந்தமாக காஞ்சி காமகோடி சங்கராச்சாரிய சுவாமிகள் திருக்கோணமலைப் பகுதி எம். பி. யும் கோணநாயகர் ஆலய புனருத்தாரண சபைச் செயலாளருமான திரு. ந. இராஜவரோதயத்திற்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். கோணநாயகர் ஆலய கும்பாபிஷேகத்தை 1963-ம் ஆண்டு ஏப்ரல் மூன்றும் திகதி நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாய் அறிந்ததாகவும் கும்பாபிஷேகத் திகதி அவ்வளவு சுபநாளாகத் தான் கருதவில்லையெனவும் இத் திகதி விஷயத்தில் மீண்டும் புனராலோசனை செய்யும் வண்ணம் தான் வேண்டுவதாகவும் சங்கராச்சாரியசுவாமிகள் தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

---

## புதுவருடதினத்தில் உத்தியோகஸ்தர் வரவு குறைவு

கொழும்பு, புதன்

புதுவருடப்பிறப்பான நேற்றைய தினம் பல அரசாங்க காரியாலயங்களில் உத்தியோகஸ்தர்கள் வரவு மிகவும் குறைந்திருக்கக் காணப்பட்டது. சில காரியாலயங்கள் விடுமுறைதினம்போலவே காட்சியளித்தன. வழக்கத்தைவிட எல்லா அரசாங்கக் காரியாலயங்களிலும் வரவு மிகவும் குறைந்திருந்தது. ஆனாலும் கிறிஸ்மஸ் தினத்திற்கு அடுத்த நாளாகிய டிசம்பர் 26-ம் திகதியைப்போல வரவு மோசமான நிலையில் இருக்கவில்லை. புதுவருடத்தினம் பலகாலமாக அரசாங்க விடுதலை தினமாக இருந்துவந்ததும், சில வருடங்களுக்கு முன்னரே வேலை நாளாக மாற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

---

## உப்புவெளி கி. ச. தலைவர்

### கூப்பன் புத்தகத்தை ஒப்படைத்தார்

திருக்கோணமலை, புதன்

அரிசித்தட்டுப்பாட்டை நீக்குமுகமாக பொது மக்கள் தங்கள் கூப்பன் புத்தகங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்கும் வண்ணம் இலங்கை அரசாங்கம் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, உப்புவெளிக் கிராமச் சபைத்தலைவரும் திருமலை-மூதூர் மாவட்டக் கிராமசபைத் தலைவர்கள் சமாஜத்தலைவருமான திரு. ந. கைலாயநாதனும் அவரது மனைவியும் தங்கள் கூப்பன் புத்தகங்களை உணவு மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தினவிற்கு அனுப்பி வைத்தார்கள். இவ்விருவரின் கூப்பன் புத்தகங்களைப் பெற்றுக்கொண்ட உணவு மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின, திரு. ந. கைலாயநாதனுக்கு எழுதிய கடிதத்தில் கூப்பன் புத்தகங்களை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டதாகவும் "தற்போதுள்ள கஷ்டநிலைமையில் உங்களைப் போல் பொது மக்கள் தரும்அன்பையும் ஆதரவையும் கொண்டு,நாட்டின் எதிர்காலம் சுபிட்சம் நிறைந்ததாக இருக்கும் என்று எண்ணுவதில் தவறில்லை" என்றும் கூறியுள்ளார்.

---

## சேவை நலம் பாராட்டு வைபவம்

சாவகச்சேரி, திங்கள்

"அரசாங்க சேவையாளர் பொதுத்தொண்டு புரியக் கடமைப்பட்டுள்ளனர். இத்தொண்டை நீதியாகவும் நேர்மையாகவும் செய்வார்களேயானால் பொது மக்களால் கணிக்கப்படுவர். இத்தகையவர்களுள் ஒருவராக உள்ளவர்தான் இன்று உங்கள் உபசரணையைப் பெறும் திரு. சுவாமிநாதனும்" என சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் சாவகச்சேரி அரசினர் வைத்திய சாலையில் கடமையாற்றி மாற்றலாகிச் செல்லும் திரு. சின்னத்தம்பி சுவாமிநாதனுக்களித்த சேவை நலம் பாராட்டு விழாவில் கூறினர். மேற்படி விழா இளைப்பாறிய அதிபர் திரு. கே. சரவணமுத்து தலைமையில் டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இசைப் புலவர் திரு. சி. செல்லத்துரை உபசாரப்பத்திரம் வாசித்தளித்தார்.

திரு. எஸ். கே. திரவியநாயகம், திரு. எஸ். நல்லையா, வித்துவான் எம். சபாரத்தினம், திரு. கே. இராமநாதன், திரு ஏ. வி நாகலிங்கம் முதலானோர் திரு. சுவாமிநாதனையும் திருமதி சுவாமிநாதனையும் பாராட்டி உரையாற்றினர்.

திரு. சுவாமிநாதன் தமக்களித்த சேவை நலம் பாராட்டலுக்கு நன்றி கூறினர்.

---

## கூட்டுறவு உதவி ஆணையாளருக்கு பாராட்டு

கொடிகாமம், புதன்

"திரு. ஆசீர்வாதம் பரந்த நோக்கமும் விரிந்த மனப்பான்மையும் தளராத ஊக்கமும் பணிசெய்யும் பண்பாடும் நற்குணமும் வாய்ந்த சிறந்தவர் இவர் கூட்டுறவு உதவி ஆணையாளராகவிருந்த காலத்தில் யாழ்ப்பாணப் பகுதி அநேக பலனையடைந்தது. இவர் எமது ஊரைவிட்டுச் செல்வது எமக்குத் துன்பமாயினும் இன்னொரு நாடு இவராற் பயனடையப் போகின்றதென்று கருதி திருப்தி அடையவேண்டும்".

யாழ்ப்பாணம் கிழக்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். ஆர். ஆசீர்வாதத்துக்கு தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க சமாஜம் சார்பாக கொடிகாமம் கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெற்ற பிரியாவிடையில் சமாஜத் தலைவர் திரு. எஸ். கே. செல்லையா மேற்கண்டவாறு கூறினர். கூட்டுறவு உதவி ஆணையாளர் நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:

'எல்லோரும் இன்புற்றிருந்தால் தான் சமூகம் வளரும் இதற்கு கூட்டுறவு முறை பயன்தரவல்லது கூட்டுறவு முறையால் பொருளாதாரத்தை வளர்த்து நமது எதிர்கால சந்ததி பயனடைய நாம் முயற்சிசெய்ய வேண்டும்'

இளைப்பாறிய போஸ்ட் மாஸ்டர் திரு. பி. செல்லையா, திரு. டி. ஸ்ரீ முருகன், திரு. எஸ். சிவப்பிரகாசம் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர். திரு. சி. செல்லத்துரை, உதவி ஆணையாளரின் குணசீலங்களை அமைத்து ஒரு இசைப்பாட்டை பாடினர். திரு. கே. சரவணமுத்து நன்றி கூறினர்.

---

# கிராம சேவகர்களுக்கு மூன்று மாதகால பயிற்சி

## பெப்ரவரி முதலாம் திகதி ஆரம்பம்

கொழும்பு, புதன்

நேற்று வெளியாகிய கிராம சேவகர்கள்முடிவின்படி கிராம சேவகர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்கள் மூன்று மாதகாலப் பயிற்சியை முடித்துக்கொள்ளும்வரையில் இப்பொழுது கடமையாற்றும் கிராமத் தலைமைக்காரர் தமது கடமையைத் தொடர்ந்து செய்வர். புதிதாக கிராம சேவகர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் பெப்ரவரி முதலாந் திகதி பயிற்சிக்கு அழைக்கப்படுவார்கள் என அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்தார். இவர்களுக்கு இந்த மூன்று மாதங்களிலும் அரசாங்க வேலைகளைச் செய்யும் விதம்பற்றிய பயிற்சியளிக்கப்படும். இவர்களுக்கு அளிக்கப்படவிருக்கும் பயிற்சிக்கு அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களே பொறுப்பாகவிருப்பார்கள்.

இவர்களுக்கு அளிக்கப்படவிருக்கும் பயிற்சியில் அரசாங்க வேலைகள் செய்வதுபற்றிய விரிவுரைகளும், பயிற்சி முறைகளும் அடங்கியிருக்கும். கிராமத் தலைமைக்காரர் இப்பொழுது செய்துவரும் சகல அமைச்சுகளுடனும் தொடர்பான வேலைகள் யாவற்றையும் இனி கிராம சேவகர்களே செய்வார்கள். இவற்றுடன் இவர்கள் பல புதிய வேலைகளையும் கவனிப்பர்.

இவர்கள் புதிதாகச் செய்யவிருக்கும் வேலைகளில், வருமானவரி கட்டக்கூடியவர்கள் வருமானவரி கட்டாமல் இருந்தால் அவர்களுடைய பெயரை அப்பகுதிக் காரியாதிகாரிக்குத் தெரிவித்தல், தங்களுடைய பகுதியில் வீடு வாடகைக்கு விடுவோரின் பெயர்களும், அவர்கள் வசூலிக்கும் பணம் பற்றிய முழு விபரங்களும், தங்கள் பகுதியில் நெல் விளைச்சல்பற்றிய விபரம், காணிச் சொந்தக்காரர்களுக்கு நெல் செய்கையினால் ஏற்படும் வருமானம் ஆகியவைகளும் சிலவாகும்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர்களுக்கு பயிற்சிக் காலத்தில் வேதனம் வழங்கப்பட மாட்டாதெனவும், ஆனால் பயிற்சிக்காக போக்குவரத்துச் செலவுக்குச் சிறு தொகை வழங்கப்படுமெனவும் அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்தார்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர்களில், வேண்டிய தராதரமுடையவர்களாய்க் காணப்பட்ட தற்போதைய கிராமாதிகாரிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். புதிய கிராம சேவகர்களாகத் தெரிவு செய்யப்படாத தற்போதைய கிராமத் தலைவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவது பற்றி பின்னர் ஆராயப்படலாமெனத் தெரிகிறது.

---

## 'அடிச்சுவட்டை பின்பற்றுவேன்'

### புதிய நகரசபை அங்கத்தவர் உறுதி

திருக்கோணமலை, புதன்

திருக்கோணமலை நகராண்மைக் கழகத்தின் மார்கழி மாதத்திய கூட்டம் திங்கட்கிழமை பிற்பகல் கழகத் தலைவர் திரு. சி. சிவானந்தம் தலைமையில்நடைபெற்றது. கூட்டத்தில் புதிதாக 8-ம் வட்டார உறுப்பினராகத்தெரிவுசெய்யப்பட்ட திரு. செ. நந்தகோபாலை வரவேற்று தலைவர் திரு. சிவானந்தம், ஏழாம் வட்டார உறுப்பினர் திரு. இ. சோமசுந்தரம், முதலாம் வட்டார உறுப்பினர் திரு. ஞா. லூக்கஸ், மூன்றும் வட்டார உறுப்பினர் திரு. காதர், 4-ம் வட்டார உறுப்பினர் திரு. நேமிநாதன், இரண்டாம் வட்டார உறுப்பினர் திரு. எஸ். இராஜதுரை ஆகியோர் பேசினர்கள். பாராட்டுகளுக்குப் பதிலளித்து திரு. நந்தகோபால் பேசுகையில்,மூதூர் முதல்வர் உயர்திரு ஏகாம்பரம் அவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றி எனது சேவையை எனது எட்டாம் வட்டார மக்களுக்கும், நான் பிறந்த பொன்னாட்டிற்கும் செய்வேன் என்று கூறினர்.

'நகராண்மைக் கழக நூல் நிலையக்குழு உறுப்பினராகவும் சமூக சேவையாளராகவும் பல வருட காலமாகப் பணியாற்றி தற்பொழுது இந்துக் கல்லூரியிலிருந்து விலகிச் செல்லும் திரு. என். அம்பலவாணருக்கு ஓர் விருந்துபசாரம் நடத்த வேண்டும்' என்று திரு. இ. சோமசுந்தரம் கொண்டுவந்த பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

---

## சேரிஒழிப்பு விடமைப்புத் திட்டம்

### காங்கேசன்துறையில் எஸ். ஜே. வி. திறந்துவைத்தார்

யாழ்ப்பாணம், புதன்

"நகர்களில தனித்தனியே சுகாதார வசதிகள் அமைந்த வீடுகள் அமைத்து வாழவசதியில்லாமல் குடிசைகளில் நெருக்கமாக வாழ்பவர்கள் சுகாதார வசதிகளுடன் வாழவேண்டும். இதுவே அரசாங்கத்தின் எண்ணமாகும். இந்த வகையிலேயே சேரிஒழிப்புத்திட்டமென்ற பெயரில் வீடுகட்டும் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது".

இவ்வாறுகாங்கேசன் துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. அ. இராசரத்தினம் நேற்று மாலை மயிலிட்டியில் சேரிஒழிப்புத்திட்ட அமைப்பில் கட்டப்பட்ட வீடுகள் திறப்புவிழா வைபவத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே வி. செல்வநாயகம் குத்துவிளக்கேற்றி வீடுகளை திறந்துவைத்துப் பேசுகையில்:

'மக்கள் சுகாதாரமான சூழ்நிலையில் ஆரோக்கிய வாழ்வு நடத்தவேண்டும். இக் கருத்துடன் அமைக்கப்பட்ட வீடுகளைப்போல எல்லாப்பகுதிகளிலும் அமைக்கவேண்டும். அரசாங்கம் இப்பட்டின சபைக்கு 70,000 ரூபாய் நன்கொடை வழங்கியிருப்பதனை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது" என்று குறிப்பிட்டார்.

---

# திருமலைக்கு போலிஸ் அதிபர் விஜயம்

## பன்குளத்தில் புதிய பொலிஸ் நிலையம் நிறுவப்படும்

திருக்கோணமலை, திங்கள்

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எம். டபிள்யு. எப். அபயக்கூன் சென்ற சனிக்கிழமை திருக்கோணமலைக்கு விஜயம்செய்து திருகோணமலை பொலிஸ் நிலையம், பொலிஸ் குடியிருப்புப்பகுதி ஆகியவற்றைப் பார்வையிட்டார். பின்னர் திருமலைப்பகுதி பொலிஸ் அலுவலகத்தில் ஒரு மகாநாடு நடத்தினர். உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. லிம்புருகனும் இம்மகாநாட்டிற்குச் சமுகமளித்தார். திருகோணமலை எம். பி. திரு. என். ஆர். இராஜவரோதயம் உட்பட பல உயர்தர அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

திருக்கோணமலைப் பகுதியில் டைனமைட் வைத்து மீன்பிடிப்பவர்கள் பெருகிவருவதாகவும் இதைத் தடுக்க உடனடி நடவடிக்கைகள் எடுப்பதெனவும் இம்மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. திருக்கோணமலை எம். பி. திரு. ந. இ. இராஜவரோதயம் மகாநாட்டில் பேசுகையில் பன்குளம், கிவுளக்கடை, கோமரங்கடவல் ஆகிய பகுதிகளில் குற்றச் செயல்கள் நடைபெறுவதால் அப்பகுதியில் பொலிஸ் நிலையம் ஒன்று நிறுவப்படவேண்டும் என்று கூறினர். பன்குளத்திலேயே அப்பொலிஸ் நிலையம் நிறுவ ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் ஆனல், பொலிஸாருக்கான குடியிருப்பு வசதிகளை பன்குளத்தில் காணி அபிவிருத்தியினரச் செய்து கொடுக்கவேண்டுமெனவும் உயர்தர பொலிஸ் அதிகாரியொருவர் மகாநாட்டில் கூறினர். நிலாவெளியிலுள்ள பொலிஸ் நிலையத்தைக் குச்சவெளிக்கு மாற்ற தீர்மானித்ததாகவும் மகாநாட்டில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. திருமலைப் பொலிஸாரின் குடியிருப்புப்பகுதி வீடுகள் இடிந்து விழும் அபாயத்திலிருக்கின்றன எனவும் வீடுகளில் குடியிருப்பவர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படின், அதற்குப் பொலிஸ் இலாகாதான் பொறுப்பேற்கவேண்டுமெனவும்திருமலை எம். பி. திரு.இராஜவரோதயம் மகாநாட்டில் வற்புறுத்திக் கூறினர். இதற்கு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதிலளிக்கையில் பொலிஸ் இலாகாவில் புதிய வேலைகளுக்கென மான்யம் ஒதுக்கப்படவில்லையென்றும் ஆகவே இவ்வேலைகளைச் செய்வது நிச்சயமில்லையெனவும் பதிலளித்தார்.

---

## உதவாத தண்ணீர்

கொழும்பு, புதன்

சாராயம் வடிப்பதற்காக களுத்துறை ரீக்சைட் ஸ்ரோஸ் கிணற்றிலிருந்து எடுக்கப்படும் தண்ணீர் உபயோகத்திற்குத் தகுந்ததல்ல என்று அரசாங்க பரிசோதகர், கலால் இலாகா கமிஷனருக்குத் தெரிவித்துள்ளார். பரிசோதனை இலாகாவினர் இக் கிணற்றைப் பரிசோதனை நடத்தி இதற்குள் அதிகமான இரும்பும், அழுக்குகளும் இருப்பதாக அறிவித்துள்ளனர். இக் கிணற்றுத் தண்ணீரை உபயோகித்து வடிக்கப்படும் சாராயம் யாழ்ப்பாணம், திருக்கோணமலை, மட்டக்களப்பு,வவனியா, .நீர்கொழும்பு, பதுளை ஆகிய இடங்களுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகின்றது.

# திருமலை அரசாங்கவிளையாட்டு கழகப் போட்டி முடிவுகள்

திருக்கோணமலை, செவ்.

திருக்கோணமலை அரசாங்க விளையாட்டுக் கழகம், அதன் விளையாட்டுப் போட்டிகளை அண்மையில் நடத்தியது. இப் போட்டிகளில் உறுப்பினர்கள் மாத்திரமே கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டது. முடிவு பின்வருமாறு:-

(1) டென்னிஸ்: (ஒற்றைவீரருக்கானது)முதலாவது வெற்றி பெற்றவர்: திரு. டி. குணநாயகம். இரண்டாவது வெற்றி பெற்றவர்: திரு. ஏ. வண்டக்கோ .

டென்னிஸ்: (இரட்டையர்க்கானது) முதலாவது வெற்றி பெற்றவர்கள்: திரு. ஏ. வண்டச்கோன், திரு. ஈ. ஏ. தேவசகாயம். இரண்டாவது வெற்றி பெற்றவர்கள்: திரு. பி. நவரட்னம், திரு. என். சிவசிதம்பரம்.

டென்னிஸ்: (ஆண், பெண் இருபாலாருக்கும் ஆடியது) முதலாவதுசாம்பியன்கள்: திரு. ரி. குணநாயகம், திருமதி குணநாயகம்.

இரண்டாவது சம்பியன்கள்: திரு. டி. எம். ஏ. ஸ்பெல்ட்வின்ட், திருமதி. தர்மரட்ன

விளையாட்டுக் கழகத்தின் வெற்றிக் கிண்ணத்தை திரு. எம். எம். அப்துல்காதர் பெற்று டென்னிஸ் வெற்றிவீரரானர்.

(2) டேபிள் டென்னிஸ்: (ஒற்றை வீரர்க்கானது) முதல் வெற்றி பெற்றவர்: திரு. ரி. எம். பாருக் ஜன். இரண்டாவது மெற்றி வீரர்: திரு. ஏ. காசிம்.

டேபிள் டென்னிஸ்: (இரட்டையர்க்கானது) முதலாவது வெற்றிவீரர்கள்: திரு. டி. எம். ஏ. ஸ்பெட்ல்வின்ட், திரு. வி. வி. கிருபாலரட்னம்.

இரண்டாவது வெற்றி வீரர்கள்: திரு. டி. குணநாயகம், திரு. ஏ. முத்துலிங்கம்.

விளையாட்டுக் கழகத்தின் வெற்றிக் கிண்ணத்தை திரு. வி. வி. கிருபாரட்னம் பெற்று டேபிள் டென்னிஸ் வெற்றி வீரரானர்.

பாட்மின்டன்: (ஒற்றையர்க்கானது) முதலாவது வெற்றி வீரர்: திரு. ரி. குணநாயகம். இரண்டாவது வெற்றி வீரர்: திரு. ஆர். சந்தரமூர்த்தி.

பாட்மின்டன்: (இரட்டையர்க்கானது) முதலாவது வெற்றி வீரர்கள்: திரு. ரி. குணநாயகம், திரு. எஸ். எச். கனன்.

இரண்டாவது வெற்றி வீரர்கள்: திரு. சிறிபாலா, திரு. முத்துலிங்கம்.

விளையாட்டுக் கழகத்தின் வெற்றிக்கிண்ணத்தை திரு. ரி. குணநாயகம், திரு. கனன் ஆகியோர் பெற்று பாட்மின்டன் வெற்றி வீரர்களானர்கள்.

கரம்: (ஒற்றையர்க்கானது) முதல் வெற்றி வீரர்: திரு. கே. கணேசன். இரண்டாவது வெற்றி வீரர்: திரு. வி. நவரட்ணராசா.

கரம்: (இரட்டையர்க்கானது) முதல்வெற்றி வீரர்கள்: திரு. கே. கணேசன், திரு. ரி. ராஜேஸ்வரன்.

இரண்டாவது வெற்றி வீரர்கள்: திரு. ரி. குலசிங்கம், திரு. நவரட்னம்.

கரம்: (கலப்புப் போட்டி) முதல் சம்பியன்கள்: திரு. வி. நவரட்னராசா, திருமதி. குணநாயகம்.

இரண்டாவது சாம்பியன்கள்: திரு ஸ்பெல்ட்வின், திருமதி. ஸ்பெல்ட்வின்.

ஆச்சன் பிரிட்ஜ்: (இரட்டையர்) முதல் வீரர்கள்: ரி. ராஜேஸ்வரன்,எஸ். சிவலிங்கம். இரண்டாம் வீரர்கள்: ஏ. தேவசகாயம், சனக்குமாரன்.

கண்ட்ராக் பிரிட்ஜ்:

முதல்வெற்றி வீரர்கள்: திரு. எஸ்.சிவலிங்கம், திரு.ரி. ராஜேஸ்வரன்.

இரண்டாம்வெற்றி வீரர்கள்: திரு ஸ்பெல்ட்வின்ட்,திரு. டபிள்யு. கதிர்காமர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

வியாழன் 3-1-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை: 6-25 திருவெம்பாவை அஞ்சல், 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல்: 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை: 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாத்தியக் கோஷ்டி.

இரவு: 7-00 டி. ஈ. அம்பலவாணர்—பேச்சு, 7-15 நேயர் விருப்பம். 7-45 'சிரித்தது கொட்டம்'—நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 லயவின்யாசம், 9-30 குரல்வகை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்).

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை: 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-35 மதுரை சரஸ்வதி லக்ஷ்மணன்—பாட்டு.

பகல்: 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மதுரை சரஸ்வதி லக்ஷ்மணன்—பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 ராமநாதபுரம் எம். என். நடராஜபிள்ளை-புல்லாங்குழல்.

மாலை: 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 வாத்திய இசை, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு: 7-20 சென்னை அஞ்சல், 8-40 திரைப்பட இசை, 9-15 வீர பாரதம்—இசைச் சித்திரம், 9-30 அகில பாரத இலக்கிய நிகழ்ச்சி.

## சனசமூகநிலையங்களின் சமாசவிழா
### ராஜாஜிக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், புதன்

எதிர்வரும் ஏப்ரல்மாத மத்தியில் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கும் தங்கள் சமாசவிழாவை ஆரம்பித்துவைக்கும்பொருட்டு யாழ்ப்பாணத்திற்கு வருகைதருமாறு ராஜாஜியை அழைப்பதென யாழ்ப்பாண மாவட்ட சனசமூகநிலையங்களின் சமாசம் தீர்மானித்துள்ளது. அண்மையில் சமாசத் தலைவர் இராசவாசல் முதலியார் சி. தியாகராசா தலைமையில் நடைபெற்ற சமாசச் செயற்குழுக் கூட்டத்தில் இதுபற்றி ஆலோசிக்கப்பட்டது.

சமாசவிழாப் போட்டிக்கான விண்ணப்பங்களை 31-1-63 வரை ஏற்றுக்கொள்வதென்றும், உப விழாக்களை மார்ச் மாதம் 15-ம் திகதிக்கு முன் நடத்திமுடிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. திருக்குறள் மனனம், கட்டுரைப்போட்டி என்பவற்றிற்கான போட்டிகளைப் பங்குனி மாத மத்தியில் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. பண்டிதர் வீ. வ. நல்லதம்பி பண்டிதர் க. யோ. ஆசிநாதர் என்போர் இதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டனர்.

---

திருக்கோணமலை, புதன்

மூதூர், கங்களாய் போன்ற கிராமப் பகுதிகளிலுள்ள விவசாயிகள் தாங்கள் கொடுக்கும் நெல்லுக்கு உடனுக்குடன் பணம் பெறமுடியாது இருக்கிறது என்றும், இதற்கு இங்குள்ள அரசாங்க நெல் கொள்வனவு சங்கங்கள் தான் காரணமென்றும், இந்நிலை பலமாத காலமாக நீடித்துவருகிறதென்றும் மூதூர் முதல் பாராளுமன்றப் பிரதிநிதியிடம் புகார் செய்துள்ளனர்.

## ஜனசமூகநிலைய 13-ம் வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

சென்ற 30-12-62-ல் நிறைவேறிய நல்லூர் தெற்கு ஜனசமூக நிலைய 13-ம் வருடத்தைய மகாசபைக் கூட்டத்தை ஆரம்பித்துவைத்த அதன் தலைவர் திரு. த. இராசரத்தினம் பேசுகையில் இச் சனசமூகநிலைய ஆதரவில் இளம் விவசாயிகள் கழகம், வாலிபர் சங்கம், பஞ்சாயத்துசபை, மாதர் சங்கம் ஆகியன மக்களின் ஒற்றுமையால் இயங்குகின்றனவென்றும் இவற்றுள் பஞ்சாயத்து சபைமக்களை நீதிஸ்தலத்திற்குச் சென்று பொருட் செலவு செய்யாமல் தடைசெய்து ஒற்றுமையை நிலைநாட்டி வருகிறதெனவும், மென்மேலும் யாவரையும் ஒத்துழைக்கும்படியும் வேண்டிக்கொண்டு, இளம் வாலிபர்களை அரசாங்க உத்தியோக மோகத்தை நீக்கிக் கைத்தொழில்களை உற்பத்தி செய்ய இந்நிலையம் திட்டமிட்டிருக்கின்றதெனவும் குறிப்பிட்டார்.

காரியதரிசி திரு. பொ. புண்யசிங்கம் பேசுகையில், மக்களின் ஒற்றுமையால் சனசமூக நிலயத்தைப் புதிதாகநிர்மாணிக்க முடிந்ததெனவும் சென்ற

## வேலைநீக்க உத்தரவு
### 40 குமாஸ்தாக்களுக்கு வழங்கப்பட்டது

கொழும்பு, புதன்

கொழும்பிலுள்ள பிரபல இறக்குமதி ஸ்தாபனமான கொழும்பு ஏஜன்ஸிஸ் அங்கு கடமையாற்றும் 40 குமாஸ்தாக்களுக்கு வேலைநீக்க உத்தரவு வழங்கியுள்ளது.

அடுத்த மாதம் 28-ம் திகதிக்கு முன்னர் வேலையிலிருந்து விலகலாமென்றும் இருமாதச் சம்பளம் வழங்கப்படுமென்றும் இந்த ஸ்தாபனம் குமாஸ்தாக்களுக்கு தெரிவித்துள்ளது.

---

ஆண்டில் அரசாங்க உதவி பெருதிருந்தும் நிர்வாகம் சீராக நடைபெற அங்கத்தவர்கள் செய்துவந்த தொண்டுகளைப் பற்றிப் பாராட்டிப் பேசினர்.

திருவாளர்கள் அ இரத்தினம், இ. செல்வமாணிக்கராஜா, ஆசிரியர் பொ. ஏகாம்பரம், சி. வயித்திலிங்கம், சி. துரைராசா, மு. காசிப்பிள்ளை ஆகியோரும் சொற்பொழிவாற்றினர். கூட்ட நிகழ்ச்சிகளின் பின்னர் 14-ம் ஆண்டின் உத்தியோகஸ்தர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## போயா நாட்கள் ஓய்வுநாட்களாகும்?
### ஞாயிற்றுக் கிழமைக்குப் பதில்

கொழும்பு, புதன்

ஞாயிற்றுக் கிழமைகளுக்குப் பதிலாகபோயா நாட்களை ஓய்வு நாட்களாக்குவது பற்றி அரசாங்க இலாகா அதிகாரிகளுடனும், வர்த்தக ஸ்தாபனங்களுடனும் தொழிற் சங்கங்களுடனும் உள்நாட்டு அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா கலந்தாலோசித்து வருகிறார். பௌத்த ஆலோசனைக சமிட்டியினர் இதுபற்றி மந்திரியைப் பேட்டிகண்ட தன் பேரிலேயே இவ்வித ஆலோசனை செய்து வருகிறார்.

போயாநாட்களை ஓய்வு நாட்களாக்கினல் ஒரேவிதமான வகையில் வேலைசெய்யும் கிழமை நாட்கள் அமைய மாட்டாது எனவும், அகில உலகத்திலும் ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாட்களாக இருக்கும் போது இலங்கையில் மட்டும் போயா நாட்கள் ஓய்வு நாட்களாக்கப்பட்டால் அது ஒரு தனிப்பட்ட தன்மையாகவிருக்கும் எனவும் உள்நாட்டு அமைச்சு அதிகாரி ஒருவர் இது பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.


# ஒஸ்டர்மில்க்

தாய்பாலின் தன்மையை மிக நெருங்கியது




தாய்பால் ஊட்டமுடியாத தருணங்களிலோ அல்லது தாய்பால் போதாமற் போகும் வேளைகளிலோ நீங்கள் ஒஸ்டர்மில்க்கை பரிபூரணமாக நம்ப முடியும். ஒஸ்டர்மில்க் திடகாத்திரமான சுகவளர்ச்சிக்கு அவசியமான இறும்பு சத்தும், விட்டமின் டியும் கொண்ட ஒரு சுத்தமான பால் ஆகாரம்.

உங்கள் குழந்தை ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் திகழ

# ஒஸ்டர்மில்க்

ஒஸ்டர்மில்க் குழந்தை புத்தகம் இலவசமாய் கொடுக்கப்படும்.
தபாற் செலவுக்காக 10 சத முத்திரை ஒன்றை கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்.
கிளக்ஸோ—அலன்பரிஸ் (சிலோன்) லிமிட்டட் தபாற் பெட்டி 23, கொழும்பு.

# "ஆசிய குளத்தில் சீன பெரிய முதலை

## சிறு மீன்களை விழுங்க அது முயல்கிறது"

—நேரு

புதுடில்லி, ஜன. 2

**ஆசியா என்னும் குளத்தில் சீன பெரிய முதலையைப்போல் இருந்து, சிறிய மீன்களை விழுங்க முயற்சிக்கிறது என பிரதமந்திரி நேரு கூறினர்.**

"தற்போதைய சீன அரசாங்கம், இந்திய மீது தாக்குதல் நடத்தியதன் பலனாக பெரும் சீனக் கலாச்சாரத்தையே அழித்து வருகிறது. காரணமின்றி நடத்தப்பட்ட இத்தாக்குதலினால் இந்தியாவை விட சீனவின் சொந்தக் கலாச்சாரத்திற்கும், பெருமைக்கும் கேடு ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் இந்தியா பெரும் மரபு கொண்ட நாடு. எந்தப் பெருந்தாக்குதலையும் சமாளிக்கும் திறன் நமக்கு உண்டு. இறுதி வெற்றி பற்றி எமக்குச் சந்தேகமே இல்லை. இந்தியாவின் சமாதான நோக்கத்தைச் சீன தவருக புரிந்துகொண்டு விட்டது.

இதன் காரணமாகச் சகல அம்சங்களிலும் அது பரிதாபமாகத் தோல்வியடைந்திருக்கிறது. மிருகபலத்துக்கு முன் பணிவது அகிம்சையல்ல. சீன ஒருதலைப் பட்சமாக சண்டையை நிறுத்தியிருப்பதால் அந்நாட்டுடன் நமக்குள்ள ச[illegible]டை முடிந்துவிட்டதாக அர்[illegible]மில்லை. தைரியம், வீரம் ஆ[illegible]ய வற்றில் பாரதம் எப்போ[illegible]மே களைத்ததில்லை" என்றும் நேருஜீ குறிப்பிட்டார்.

## வியட்னமில் கடும் சண்டை
## 200 பேர் பலி!

லண்டன், ஜன 2

வியட்னமில் வியட்காம கொரில்லாக்கள் 5 அமெரிக்க ஹெலிகோப்டர்விமானங்களைச் சுட்டு வீழ்த்தினர். 200 வியட்னும் வீரர்கள் கொல்லப்பட்டதாயும், பெரும் சண்டை தொடர்ந்து நடைபெற்றுவருவதாயும் அறிவிக்கப்படுகிறது.

## இலங்கைக்கு 3 ஆலோசகர்கள்

கொழும்பு, புதன்

திரு. ஆர். எஸ். சட்டி, திரு. ஜே. எம். ஸ்ரீவத்ஸவா, திரு குருபிரஸாத், ஆகிய மூவரைக் கொண்ட ஆலோசனைக்குழு ஒன்று இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் கொழும்பு வந்துள்ளது. இ. போ. ச.வுக்கு இது ஆலோசனை கூறும்.

# காணி இழந்தவர்களுக்கு தற்காலிக வேலை வசதி

## காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் கொடுக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், வியாழன்

காங்கேசன்துறை சிமிந்தித் தொழிற்சாலை விஸ்தரிப்புக்காக அரசாங்கம் காணிகளை எடுத்ததனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் பெரும்பாலோர்க்கு சிமிந்தித் தொழிற்சாலையில் தற்காலிகமாக தற்போது வேலை வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் திறனைப் பொறுத்தே அவர்கள் நிரந்தரத் தொழிலாளர்களாக நியமனம்பெறுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வேலை வழங்குவது சம்பந்தமாக காங்கேசன் துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் சிமிந்திதொ. ழிற்சாலை தொழில் மனேஜருடன் சமீபத்தில் பேச்சுவார்த்தை நடத்தியதும் நினைவிருக்கலாம்.

காணிகளை அரசாங்கம் எடுத்ததால் பாதிக்கப்பட்ட நூற்றுக்குமதிகமான விவசாயிகள் நேற்றையதினம் சிமிந்தித் தொழிற்சாலையில் கூடி தற்காலிக வேலைகளை ஏற்றுக்கொண்டனர்.

## 32339 பேரில் 99 பேருக்கே வேலை

1962-ம் வருடம் அக்டோபர் மாதத்தில் 32,339 பேர் வேலை தேடியும் நல்ல வேலை தேடியும் தொழில் கந்தோரில் பதிவு செய்திருந்தனர். ஆனல் 99 பேருக்கே வேலை கிடைத்தது.

## திரு. கி. வா. ஜகநாதன்

யாழ்ப்பாணம், வியாழன்

திருக்கேதீசரத்தில் நடைபெறும் திருவாசக மகாநாட்டில் கலந்து கொள்ள 'கலைமகள்' ஆசிரியர் திரு. கி.வா. ஜெகந்நாதன் நேற்று சென்னையிலிருந்து விமான மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். இன்று மாலை வவுனியா மார்க்கமாக திருக்கேதீச்சரம் செல்லுவாரென்று தெரிகிறது.

## இன்று வாக்குகள் மீண்டும் எண்ணப்படும்

கொழும்பு, புதன்,

1960-ம் வருடம் ஜூலை மாதத்தில் நடைபெற்ற தேர்தலில் ஹேவாகெட்டை தொகுதியில் அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் மீண்டும் எண்ணப்படவேண்டுமென நீதியரசர் திரு. கிங்ஸ்லி ஹேரத் உத்தரவுப் பிறப்பித்திருந்ததற்கிணங்க நாளை கொழும்புகோர்ட்டில் இவை எண்ணப்படும். வரும் வெள்ளிக்கிமை வரை இது நடைபெறும்.

## கல்வி இலாகா குமாஸ்தா
### தற்காலிக வேலை நீக்கம்

கொழும்பு, புதன்

ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சையில் பௌதிகம். ரசாயனம் ஆகிய இரு வினத்தாள்கள் முன் கூட்டியே வெளியானது சம்பந்தமாக கைது செய்யப்பட்ட பரீட்சை இலாகாவில் கடமையாற்றி வந்த குமாஸ்தாவுக்கு பரீட்சை கமிஷனர் திரு. பேரின்பநாயகம் தற்காலிக வேலைநீக்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பௌதிகம்,ரசாயனம் ஆகிய இரு பாடங்களுக்கான பரீட்சைகளும் எப்பொழுது இடம் பெறும் என்பதுபற்றி இன்னும் முடிவு செய்யவில்லை என பரீட்சை கமிஷனர் தெரிவித்துள்ளார்.

## சேவையே தெய்வீக..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டும். இறைவனையே இலட்சியமாகக்கொண்டுவாழவேண்டும்.

உழைக்க விரும்பாத உலகத்திலே நாம் வாழ்கின்றோம். எல்லாச் சமயங்களையும் துருவி ஆராய்ந்தால் கடவுள உள்ளதனை உணரலாம்.

நூல்கள் வாழ்க்கையில் ஓரளவுதான் பயன்படும். எந்த நூலைப் படித்தாலும் படிக்க முன்னர் சில இலட்சியங்கள் வேண்டும். இலட்சியமில்லாத கல்வியினுற் பலனில்லை. உண்மைக் கருத்தை உணர்ந்தவர்கள் இந்த உலகில் குறைவு

"நாட்டில் பேச்சு கூடிக் கொண்டு வருகிறது. அதே சமயம் செயல் குறைந்து வருகிறது. உயர்ந்த வாழ்க்கை வேண்டுமானல் பிறரின் வாழ்க்கையை ஆராயக்கூடாது.

சேவை, அன்பு, ஈதல், தியாமை, முதலிய பண்புகள் வாழ்க்கையில் அமைய வேண்டும். இறைவனின் தோற்றங்களையுடைய ஜீவர்களுக்குச் சேவை செய்யும் எண்ணம் வளரவேண்டும். தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் சேவை மனப்பான்மை வேண்டும். இதைப் பரப்பவே குருதேவர் சுவாமி சிவானந்தா திவ்விய ஜீவன சபையை ஸ்தாபித்துள்ளார்கள்.

உலகத்தில் உண்மையான மனிதனை உண்டாக்குவது அரிது. காவியங்கள் கற்பின் வளத்தைத் தருமே தவிர உண்மையான மனிதனை உண்டாக்காது. விளம்பரத்தினுல் சேவை செய்துவிட முடியாது. சேவையே வாழ்க்கைக்கு முதல் வழியாகும்.

அன்பு ஒன்றினைக் கொடுக்குமே தவிர எதனையும் வாங்காது. துயரில் உள்ளவர்களுக்கு கொடுக்க எவன் எண்ணுகிருனே அவனே அன்புள்ளம் படைத்தவனுகின்ருன். உள்ளம் நிறைவு நிரம்பப் பெற்றவனுக்கு ஆடம்பர எண்ணம் ஒருபோதும் உண்டாக்காது. சேவையிலே அன்பைக்கண்டு, ஈந்து செயற்படவேண்டும்.

ஆண்டவனை வழிபடுகிறபோது வேறு சிந்தனைகளுக்கு இடமளிக்கக் கூடாது. கருமஞ் செய்வதினுலேயே உள்ளம் தூய்மையடையும் உள்ளத்தைக் கோயிலாக்கி உண்மையைத் தெய்வமாக்கிக்கொள்ள வேண்டும். அப்போது தான் உயர்ந்த வாழ்க்கையை எய்த முடியும். பாட்டிலே பரமனையும் சுவையிலே இறைவனையும் கண்டவர் நமது முன்னோர்கள். திருவாசகத்தை உள்ளம் உருகிப்பாடினுல் உயர்ந்த வாழ்க்கையை அடைய முடியும். ஜாதி உணர்ச்சி சிறிது இருந்தாலும் கடவுளை அடைய முடியாது.

கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெற்றது. திரு. கனகரத்தினம் நன்றி கூறினர்.

## தைப்பொங்கல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரங்கள் மூலம் 'பர்மிட்' பெறப்படுவதாகச் செய்திகிடைத்திருக்கிறது. சர்க்கரைப் பர்மிட்டுகளுக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் இனிமேல் கடுமையான பரிசீலனைக்குள்ளாகுமென்றும் அதன் [illegible]ன்பே 'பர்மிட்' வழங்கு[illegible]து பற்றி முடிவு செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ்நாட்டில் 12 கம்யூனிஸ்டுகள் விடுதலை

சென்னை, ஜன. 2

தமிழ்நாட்டில் சிறை வைக்கப்பட்டிருக்கும் 106 கம்யூனிஸ்டுகளில், 12 பேரை விடுதலை செய்யுமாறு சென்னை அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

## பாடசாலைகளில் இட நெருக்கடி
### பெற்றோர் கஷ்டம்

யாழ்ப்பாணம்,வியாழன்

பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு அனுமதி பெறுவதில் பெற்றோர்கள் பெரிய கஷ்டத்துக்குள்ளாகி வருகிருர்கள். இங்குள்ள பாடசாலைகள் எல்லாவற்றிலும் பெருந்தொகையான பெற்றோர்கள் பிள்ளைகள் சகிதம் நாள்முழுவதும் நேற்று நிற்கக் காணப்பட்டனர்

இட நெருக்கடி முதலிய பல காரணங்களால் பிள்ளைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. நான்குவயது ஒன்பது மாதம் நிரம்ப இன்னமும் 12 நாள் மாத்திரமுள்ள பிள்ளையொன்றுக்கு வயது போதாதென்ற காரணத்தால் இங்குள்ள பெரிய கல்லூரியொன்றில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. உதவி வித்தியாதிபதியின் அனுமதியுடன் வந்தால் சேர்த்துகொள்ள முடியுமென்று அப் பிள்ளையின் தகப்பனுருக்கு அறிவிக்கப்பட்டதாம்.

பாடசாலை வாசல்களில் இப்பொழுது கூட்டம் கூட்டமாக பெற்றோரும் பிள்ளைகளும் கூடி நிற்பதனுல் அதிபர்களுக்கும் பெரும் கஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

## ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள்!

பிலாடெல்பியா, ஜன.2

திருமதி ஆல்வின்ஸ்பெக்டருக்கு ஒரே பிரசவத்தில் மூன்று பையன்களும், ஒரு பெண்ணுமாக நான்கு குழந்தைகள் பிறந்துள்ளன. அவை மூன்று மாதம் குறைவாயிருக்கையிலேயே பிறந்தன். ஒரு குழந்தைக்கு 220 பவுன் வீதம் வருமானவரி விதிப்பிலிருந்து தந்தை விலக்குப் பெறலாம். திருமணமாகி இரண்டு ஆண்டுகளாகின்றன.

## நாளொன்றுக்கு 3,000 பஸ்கள்

கொழும்பு, புதன்

"இந்த வருடத்தில் நாளொன்றுக்கு 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட பஸ்களை போக்குவரத்துச்சேவையில் ஈடுபடுத்த இலங்கைப் போக்குவரத்துச் சபை திட்டமிட்டுள்ளது" என இ. போ. ச. தலைவர் திரு. ஸி. பி. குமாரசிங்கா தெரிவித்துள்ளார்.

தற்பொழுது 2,600 பஸ்கள் தான் சேவையிலிருப்பதாக அவர் தெரிவித்தார்.

திரு. குமாரசிங்கா தமது வானெலிச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"போக்குவரத்துச் செய்பவர்களின் தொகை சமீபகாலங்களில் அதிகரித்துவந்துள்ளதால் இப்பொழுது போக்குவரத்துச் சேவையிலிருக்கும் பஸ்கள் போதாதிருக்கிறது. சென்ற வருடத்தில் போக்குவரத்து செய்தவர்களின் எண்ணிக்கை 18 லட்சமாகும்.

சில வீதிகளில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதால் பஸ் சேவையை இது பெரிதும் பாதித்துள்ளது."


## விற்பனைக்கு

1. சாவகச்சேரி 4-ம் வட்டாரத்தில் சங்கத்தானை புகையிரத நிலையத்திற்கருகாமையில் மா, பலா முதலிய மரங்களும் புதிதாக அமைக்கப்பெற்ற வீடும் அடங்கிய 9½ பரப்பு நிலம் விற்பனைக்கு இருக்கிறது. ரூபா 15,000 கடன் வசதி அளிக்கப்படும்.

2. சாவகச்சேரி தனங்கிழப்பில் நெல் விளை நிலம் 65 பரப்பு விற்பனைக்குண்டு விரும்பியோர் கீழ்வரும் விலாசத்தாருடன் தொடர்பு கொள்ளவும்.

M. S. Kandiah
P.o. Box. No. 34.
Jaffna

630

### இப்பொழுது நடைபெறுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) மொடேர்ன் (பண்டாரவளை)



டி. ஆர். மகாலிங்கம், எம். ஆர் ராதா
அஞ்சலிதேவி, ஈ. வி. சரோஜா, ஏ கருணாநிதி
நடித்த

# ஆடவந்த தெய்வம்

டைரக்ஷன்: நீலகண்டன்

### மனோகரா
(யாழ்ப்பாணம்)

எம். ஆர். ராதா, ஸ்ரீ ரஞ்சனி, எம். என் ராஜம்
நடித்த

### ரத்தக் கண்ணீர்


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible]த்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.